Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only founation level Course fee
Computer Engineering - USA
Government Scholership USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1049)
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 02 வெள்ளிக்கிழமை (18.11.2011) பக்கங்கள் 16 ஓசை – 48




சிறையிலிருந்தும் மக்கள் பணி
12


வென்றது மனோகரா



06



கலாசாரத்தை பாதுகாக்கும் பக்குவம்
04



சமயத்தை வளர்க்கும் கருத்தரங்கு
05

## கூட்டமைப்புடனான பேச்சில் முன்னேற்றம் என்கிறது அரசு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது தொடர்பில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்த இரு தரப்பினரும் இணங்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இரு தரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் நடவடிக்கைகளிலும் அரசாங்கம் முனைப்புகாட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெறும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியை தோற்கடிக்க ஜே.வி.பி. முக்கிய பங்காற்றியது

### கூறுகிறார் விஜித ஹேரத்



(கொழும்பு)

இலங்கையில் நோர்வே மேற்கொண்ட சமாதான பேச்சுவார்த்தைகளும் சமாதானச் செயற்பாடுகளும் வெற்றியடையப் போவதில்லை என்று எங்களுக்கு முன்கூட்டியே தெரியும். அதனால்தான் நோர்வேயின் தேவையை இலங்கையில் நிறைவு செய்வதற்கு இடமளிக்க விரும்பாமல் நாங்கள் சமாதான பேச்சுவார்த்தைகளைத் தோற்கடித்தோம்.

அந்த வகையில் நோர்வே (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. செயலரின் குழுவை அழைத்திருக்க வேண்டும்

### பேராசிரியர் றொஹான் குணரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த தருஸ்மன் குழுவை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அரசாங்கம் அழைத்திருக்கலாம் என பயங்கரவாத விவகார நிபுணர் பேராசிரியர் றொஹான் குணரட்ன கூறியுள்ளார். அவ்வாறு அழைகப்படாத நிலையில் அக்குழு இறுதியில் புலிகள் சார்பு அமைப்புகளின் தகவல்களினதும் பிரசாரங்களினதும் அடிப்படையிலேயே அறிக்கையைத் தயாரித்துள்ளது எனவும் அவர் கூறினார்.

இலங்கையின் எதிர்காலம் மேற்குலக மண்ணில் புலிகளை எதிர்கொள்ளல் என்ற தொனிப்பொருளில் கொழும்பு பிரிட்டிஷ் கவுன்ஸிலில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் (15 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேச செயலர்கள் தெற்கிற்கு இடமாற்றம்

(கொழும்பு)

அடுத்த வருடத்திலிருந்து வடக்குப் பிரதேச செயலர்கள் தெற்குப் பிரதேசத்திற்கும், தெற்குப் பிரதேச செயலர்கள் வடக்குப் பிரதேசத்திற்கும் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக அரச நிர்வாக மற்றும் சுதேச விவகார அமைச்சர் டபிள்யு.டி.எம்.ஜே.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கான வேலைத் திட்டத்தின் கீழ் தற்பொழுது முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த வேலைத் திட்டத்திற்கான ஆரம்ப அடிப்படைக் கட்டமாக மாவட்ட செயலர்களை

(15 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக்கொடி வழக்கு தீர்ப்பு இன்று அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதான வெள்ளைக் கொடி விவகார வழக்கின் தீர்ப்பு இன்றைய தினம் வழங்கப்படவுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர தலைமையிலான குழு வெள்ளைக் கொடி விவகார வழக்குத் தீர்ப்பை அறிவிக்கவுள்ளது.

இதனை முன்னிட்டு கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இறுதிக் கட்ட யுத்தத்தில் படையினரிடம் சரணடைந்த புலிகளின் முக்கிய தலைவர்களை சுட்டுக் கொலை செய்யுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார் என சரத் பொன்சேகா கூறியதாக சண்டே லீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டது. இதன் பின்னணியில் சரத் பொன்சேகாவுக்கு எதிராக வெள்ளைக் கொடி விவகார வழக்கு பதிவு செய்யப்பட்டது.

வெள்ளைக் கொடி விவகாரம் குறித்து அரச கட்சி, எதிர்க்கட்சி, பாதுகாப்பு பிரிவினர், ஊடகங்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் பிரதம நீதியரசரால் குருநகரில் திறப்பு

### பருத்தித்துறை நீதிமன்ற கட்டடமும் திறப்பு



பருத்தித்துறை நீதிமன்றம்



குருநகர் சிறுவர் நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் பகுதியில் அமைக்கப்பட்ட இலங்கையின் இரண்டாவது சிறுவர் நீதவான் நீதிமன்றமும் பருத்தித்துறை புதிய மாவட்ட நீதிமன்றமும் நேற்றைய தினம் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினால் திறந்துவைக்கப்பட்டது.

6.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பருத்தித்துறை புதிய மாவட்ட நீதிமன்றம் நேற்றுக்காலை 10 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது. முன்னதாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, நீதியமைச்சர் (15 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு பிரதேச சபைகள் செயற்பட வேண்டும்





### பயிற்சிப் பட்டறை நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் மக்களின் நலன் களைக் கருத்திற் கொண்டு பிரதேச சபைகள் சேவையாற்ற வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற, புதிதாக தெரிவு (15 ஆம் பக்கம் பார்க்க)

## துமிந்த வெளிநாடு சென்றமை அரசிற்கு சம்பந்தம் கிடையாது

### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை அவரது உறவினர்களே வெளிநாட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும், அரசாங்கம் அழைத்துச் செல்லவில்லையெனவும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை (15 ஆம் பக்கம் பார்க்க)

# மது விற்பனை நிலையங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை

நெல்லியடிச் சந்திக்கு அண்மையில் இருக்கும் மூன்று மது விற்பனை நிலையங்களையும் அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். நெல்லியடிச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியிலும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதியிலும், கொடிகாமம் வீதியிலும் மூன்று மதுவிற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு மது விற்பனை நிலையத்திற்கு மட்டுமே உடைத்துக் குடிபதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையங்கள் இவ்விடத்தில் அமைந்திருப்பதால் மக்களுக்கு இடையூறு என கருதி மதுவரித் திணைகளத்தின் துணையுடன் இதனை அகற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதற்கான தீர்மானம் கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (12)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)


## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 21 . 08 . 1934



விண்ணில் 13 . 11 . 2011

எமது பாடசாலையின் பழைய மாணவனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சங்கரப்பிள்ளை சிவதாசன் அவர்கள் காலமாகியதையிட்டு எமது பாடசாலைச் சமூகம் அவரது குடும்பத்தாருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பளை.

(C/1089)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.10.2010 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் | |
|---|---|---|---|
| | | திகதி | இடம் |
| 01. | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையும், மானிப்பாய் சேவை நிலையமும், நாவலர் வீதி சேவை நிலையமும் | 18.12.2011 முற்பகல் 08.30 | மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை – 030 |
| 02. | காங்கேசன்துறைக் கிளையும், மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03. | யாழ். பிரதான வீதிக்கிளையும், உரும்பிராய் சேவை நிலையமும் | | |
| 04. | நெல்லியடி | | |
| 05. | அச்சுவேலி | | |
| 06. | சங்கானைக் கிளையும், பண்டத்தரிப்பு சேவைநிலையமும் | | |
| 07. | சுன்னாகக் கிளையும், கோப்பாய் சேவை நிலையமும் | | |
| 08. | சாவகச்சேரிக் கிளையும், கொடிகாமம் சேவை நிலையமும் | | |
| 09. | வல்வெட்டித்துறை | | |
| 10. | யாழ். பல்கலைக்கழகக் கிளையும், திருநெல்வேலி சேவை நிலையமும், கல்வியங்காடு சேவை நிலையமும் | | |
| 11. | யாழ். கன்னாதிட்டிக்கிளையும், இனுவில் சேவை நிலையமும் | | |
| 12. | பருத்தித்துறைக் கிளையும், புலோலி சேவை நிலையமும் | | |


அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
2011.11.16.

(C/1090)

# மரண அறிவித்தல்

## பரஞ்சோதி தேவகுஞ்சரி



காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும், யாழ். ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி தேவகுஞ்சரி கடந்த (16.11.2011) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி - செந்தில்நாயகி தம்பதியினரின் அன்பு மகளும், பரஞ்சோதி (வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்) இன் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும், செந்தூரன், சிவதர்ஷனி (சிங்கப்பூர்), சாளினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காண்டீபன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்) அன்பு மாமியும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் தனலக்சுமி தம்பதியினரின் சம்பந்தியும் அருணகிரிநாதர் (A.S.K அன் கொம்பனி - கம்பளை), இராஜகுமாரி, கமலகண்ணன் (கண்ணன் ஸ்ரோர்ஸ் - கம்பளை), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கருணாநிதி (சூரியன் களஞ்சியம்), சிவசோதி (கந்தன் களஞ்சியம் - கிளிநொச்சி), கற்பகநாதன் (சிறிமாதவன் - யாழ்ப்பாணம்), கணேசன் (ராசு களஞ்சியம் யாழ்ப்பாணம்), பாக்கியவதி, தவமணி, கோகிலாவதி, சிவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். யோகேஸ்வரி, பரமேஸ்வரி, சரோஜனிதேவி, இராஜேஸ்வரி, பாலசிங்கம், சிவானந்தம், இராஜேந்திரம் (குகன் ஸ்ரோர்ஸ் பண்டாரவளை) சிவபாதம், சொர்ணாதேவி, சிவயோகன் (கம்பளை), சுரேந்திரன் (கிருஸ்ணா ஜுவல்லரி யாழ்ப்பாணம்) நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/1518)

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்
0212225524,
0777688488

தகவல்:
குடும்பத்தினர்

கண்ணெதிரே காணும் ஒவ்வொருவரையும் நம்புவது அபாயகரமானது. அதைக் காட்டிலும் ஒருவரையும் நம்பாதிருப்பது மிகவும் அபாயகரமானது.

ஆபிரஹாம் லிங்கன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## சொர்க்கம் எவ்வாறு இழக்கப்பட்டது

திருவிளையாடல் படத்தில் சிவபெருமானாக வரும் சிவாஜி கணேசனைப் பார்த்து நாகேஷ் கூறும் வசனம் ஒன்றுண்டு. "பேசும்போது நல்ல இலக்கணமாத்தான் பேசு. ஆனால் கவிதை எழுதும் போது கோட்டை விட்டுடு..." என்பார் அரசவையில் நொந்து பட்டுத் திரும்பிய நாகேஷ்.

இலங்கையை ஒரு தசாப்தகாலம் ஜனாதிபதியாக ஆட்சி புரிந்த திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க, இலங்கைத் தீவின் உள்நாட்டுப் போரின் பின்னான நிலைமைகள் தொடர்பாக அமெரிக்காவில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டிருக்கும் கருத்துக்களைப் பார்க்கும்போது, மேற்சொன்ன திருவிளையாடல் வசனம்தான் ஞாபகம் வந்தது:

சிங்களம் மட்டுமே நாட்டின் ஒரேயொரு தேசிய மொழி என்ற தனிச் சிங்களச் சட்டம் அமுல்படுத்தியமை, அடையாள அரசியலைப் பலப்படுத்திய ஒரு பாரிய தவறு என்று அவர் சொல்லியிருக்கிறார். மேலும், இந்த அடையாளச் சிக்கலை எதிர்கொள்வதற்குரிய நிபந்தனையாக பல்லினச் சூழலைக் கையாளக் கூடிய நிலை இருந்திருக்க வேண்டும். அத்தோடு பல்லினச் சூழலின் செழிப்புகள் முன்னேற்றப் பாதையில் நகர்த்திச் செல்லப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிவித்த சந்திரிகா, இவை முன்னைய ஆட்சியாளர்களின் தவறு என்றும் சொல்லியுள்ளார்.

1994 ஆம் ஆண்டிலிருந்து 2005 வரை சுமார் பதினொரு ஆண்டுகள் இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரணதுங்க, இந்தத் தவறையும், சிக்கலையும் சீர்செய்ய அவருக்கு முடியாமல்போன காரணங்களையும் உரையில் குறிப்பிட்டிருந்தாரா என்பது பற்றித் தகவலில்லை.

இலங்கை அரசியல் முரண்பாட்டு வரலாற்றிலிருந்து அமெரிக்க மாணவர்கள் எதனைக் கற்றுக்கொள்ள முடியுமென பார்வையாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்விக்கு "சொர்க்கம் எவ்வாறு இழக்கப்பட்டது" என்பதைக் கற்றுக்கொள்ள முடியும் எனப் பதிலளித்துள்ளார்.

மீண்டும் சந்திரிகா அவர்களிடம் நாம் அறிய விரும்புவது, சகல நிறைவேற்று அதிகாரங்களும் கொண்ட ஆட்சியாளராக அமர்ந்திருக்கும்போது, இந்த சொர்க்க இழப்பைத் தவிர்க்க முடியாமல் போய்விடுவது எவ்வாறு என்ற அவரது அனுபவங்களையே. அதிலிருந்துதான் அதிகாரங்களுடன் உள்ளபோது இருக்கக் கூடிய தடங்கல்களையும், அதிலிருந்து இறங்கிய பிறகு தோன்றும் பட்டறிவையும் அலசி நமக்கு மீளும் வழி ஏதும் கிடைக்குமா என்று பார்க்கமுடியும்.

அதிகாரத்தில் உள்ளபோது இருக்கக்கூடிய இயலாமைகளையும் தடங்கல்களையும் மிக விளக்கமாக அவர் வெளிப்படுத்துவதினூடாக அதிகாரத்திலுள்ளவர்கள் விரும்பியும் முடியாமல் போகும் விஷயங்கள் பற்றிய விளக்கங்கள் நமக்குக் கிடைக்கும். அதைப் பகிரங்கமான விவாதங்களுக்குள் நாம் கொண்டு வர முடியும்.

இழந்த சொர்க்கம் பற்றிய பல்வேறு புரிதல்களை இப்போது கொண்டிருக்கும் சந்திரிகா அவர்கள், ஆட்சிபீடத்தில் இருந்த காலத்தில் இதற்குத் தடைகளாக அவர் உணர்ந்தவைகளையும், ஏன் அவற்றையெல்லாம் தாண்டி தான் நினைத்தவற்றைச் செய்ய முடியாமல் போனமை பற்றியும் விளக்கியிருக்க வேண்டும். அதிலிருந்துதான் இன்றைய ஆட்சியாளர்களுக்கோ அல்லது நாளைய ஆட்சியாளர்களுக்கோ மட்டுமல்லாது நாட்டு மக்களுக்குமாகச் சில புரிதல்கள் கிடைக்கக்கூடும்.

மானுடைய அவலத்தைப் போக்குவதற்கு உண்மையான கரிசனை கொள்பவர்கள் சிங்கமாகவும் இருந்து பார்க்கவேண்டும் என்பார்கள். சிங்கத்தினுடைய பிரச்சினைகள் என்னவென்று தெரிந்து கொள்ளாமலேயே அதே காட்டிற்குள் வசிக்கும் மான்களுடைய பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது என்பதுதான் அது. இது சிங்கத்தை நியாயப்படுத்துவதல்ல; அதனது உணவுப் பிரச்சினையைப் புரிந்துகொள்வதன் மூலமே வழிகண்டுகொள்ள முடியும் என்பதாகும்.

ஒட்டுமொத்த நாட்டுக்குமான சில புரிதல்களை பத்தாண்டுகளுக்கு மேல் அதிகாரத்திலிருந்த சந்திரிகா போன்றவர்கள், இன்னும் விளக்கமான சுயவிமர்சனங்கள் மூலம் வழங்க முடியும். அந்தத் தடங்கல்களுக்கான விவாதக் களங்கள் உருவாகுவதன் மூலமும் யதார்த்தபூர்வ வழிமுறைகளை நாம் நெருங்க முடியும்.

- ஆசிரியர்

# வகுப்புத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தென் கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் நான்கு பேரை பகிடிவதை செய்த குற்றச்சாட்டின் பேரில் 64 மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டமைக்கு எதிராக குறித்த பிரயோக விஞ்ஞான பீட மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று நேற்று இடம்பெற்றது.

குறித்த மாணவர்களை உடனடியாக கல்வி நடவடிக்கையில் உள்வாங்குமாறு கோரிக்கை விடுத்து நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் சம்மாந்துறையிலுள்ள பிரயோக விஞ்ஞான பீடத்திற்கு முன்னால் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் முதலாம் வருடத்திற்காக புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களும் கலந்துகொண்டனர்.

புதிதாக முதலாம் வருடத்திற்கு இணைக்கப்பட்டுள்ள மாணவர்கள் தங்கியுள்ள விடுதிகளுக்குச் சென்ற இரண்டாம் வருட மாணவர்கள் சிலர் பகிடிவதையில் ஈடுபட்டுள்ளனர் என்று பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வழங்கிய அநாமதேயத் தகவலையடுத்தே இந்த வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக மாணவ பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

குறித்த முறைப்பாடு தொடர்பாக எந்தவித விசாரணைகளையும் நடத்தாமலேயே பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களை இடைநிறுத்தியுள்ளனர் என அவர்கள் குறிப்பிட்டனர். இதேவேளை, அடுத்த மாதம் பரீட்சை நடைபெறவுள்ள நிலையிலேயே இம்மாணவர்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாணவ பிரதிநிதிகள் மேலும் தெரிவித்தனர்.

# நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக இயங்கும் வைத்தியசாலைகளின் ஊடாக டெங்கு ஒழிப்புத் திட்டத்தை பாரியளவில் மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. தற்போது நிலவும் காலநிலை காரணமாக நுளம்பு அதிகளவில் பெருக்கமடையலாம் என்பதனை அடிப்படையாகக் கொண்டே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்களுக்காக மருத்துவ வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வடகீழ் பருவப் பெயர்சசி மழை ஆரம்பமாகி உள்ள நிலையில், டெங்கு பெருக்கம் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தோன்றியுள்ளன.

இந்த நிலையில், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள சுகாதார அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

இதேவேளை, கடந்த 11 மாதங்களில் 22 ஆயிரத்து 244 பேர் டெங்கு தொற்றுக்கு உள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களில் 151 பேர் மரணமாகினர். டெங்குத் தொற்றுக்குள்ளானவர்களில் நூற்றுக்கு 57 சதவீதமானனோர் மேல்மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# எஞ்சியுள்ளவர்களை மீள்குடியேற்ற அரசாங்கம் 1336 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

படையினரால் கடந்த 2009 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையின் போது வடக்கு கிழக்கிலிருந்து இடம்பெயர்நத மக்களில் 97 வீதமானோர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில் எஞ்சியுள்ள 3,010 குடும்பங்களையும் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக அரசாங்கத்தினால் 1,336 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்ய அமைச்சரவையில் திர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அரசாங்கப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இன்று முற்பகல் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு தகவலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்தும் கூறுகையில், மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோனினால் அமைச்சர வையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைக்கமைய இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதுகாப்பு அமைச்சின் உதவியுடன் மேற்படி மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,672 குடும்பங்களும் திருகோணமலை, மூதூர் பிரதேசத்தில் 1,272 குடும்பங்களும் மன்னார் மாவட்டத்தில் 166 குடும்பங்களும் மீள்குடியேற்றத்துக்காக எஞ்சியுள்ளனர்.

இவர்களுக்கான நிரந்தர வீடுகள், அடிப்படை வசதிகளுடனான அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காகவே மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

# ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பினார்

(கொழும்பு)

சர்வதேச மனித உரிமையாளர்களின் சங்கத்தின் கூட்டத்தொடரில் பங்குகொள்வதற்காக சென்ற எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று முற்பகல் 8.30 அளவில் நாடு திரும்பினார். டுபாயில எமிரோட்ஸ் விமான நிறுவனத்திற்குச் சொந்தமான வானூர்தி மூலம் அவர் நாடு திரும்பினார்.

கடந்த தினத்தில் லண்டனில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமையாளர்களின் சங்கத்தின் கூட்டத்தொடரில் பங்கு கொண்ட ரணில் விக்ரமசிங்க, மீண்டும் ஆசிய பசுபிக் வலயத் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த நிலையில், நாடு திரும்பிய ரணில் விக்ரமசிங்க எதிர்கால செயற்திட்டங்கள் குறித்து விசேட கலந்துரையாடல்கள் பலவற்றில் பங்குகொள்ள உள்ளதாகவும் அறிவிக்கபபட்டுள்ளது.

# துமிந்தவை கைது செய்வது; ஆலோசனை பெறத் தீர்மானம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், தற்சமயம் அவர் வெளிநாட்டில் சிகிச்சைபெற்று வருவதால், அவரை கைது செய்வது தொடர்பாக சட்டமா அதிபர் ஈவா வனசுந்தரவிடம் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் ஆலோசனை பெறத் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பாக ஆலோசனையைப் பெற சட்டமா அதிபர் ஈவா வனசுந்தரவை பொலிஸ்மா அதிபர் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை, துமிந்த சில்வாவை கைதுசெய்வதற்கு சர்வதேச பொலிஸாரின் உதவியைப் பெறுவதா அல்லது சிகிச்சையின் பின்னர் நாடு திரும்பும்போது விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்வதா என்பது தொடர்பாக இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முல்லேரியாச் சம்பவத்தில் உயிரிழந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லகஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை 15 பேர் அடங்கிய சந்தேகநபர்களின் பெயர்ப் பட்டியலில் சேர்க்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குப் பணிப்புரை விடுத்துள்ள கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம், துமிந்த சில்வாவையும் உடன் கைது செய்யுமாறும் உத்தரவு பிறப்பித்திருந்தது.

# கலாசாரத்தைப் பாதுகாக்கும் பக்குவம் வளர்க்கப்பட வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

(கிளிநொச்சி)

சில ஊடகங்களில் வருகின்ற ஒரு சில தலைப்புச் செய்திகளை மட்டும் வைத்துக் கொண்டு எமது இனத்தின் கலை கலாசாரம் சீரழிந்து விட்டதாக கருதிவிட முடியாது என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் கலாசார விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த முப்பது வருட கால யுத்தம் எமது இனத்தின் கலை கலாசார பண்பாட்டு விடயங்களில் பெரும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இருபினும் எமது கலாசாரம் சீரழிந்து விட்டது என்ற முடிவுக்கு வந்து விடமுடியாது. ஆனாலும் எமது கலை கலாசாரம் பாதகமான சூழலுக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. எனவே நாம் இதிலிருந்து மீண்டு கலை கலாசார புண்பாட்டு விடயங்களை பேணிப் பாதுகாக்கும் பக்குவத்தை அனைவரிடத்தும் வளர்த்தெடுக்க வேண டும். இது சமூகத்தின் கூட்டு பொறுப்பு.

நவீன தொழில்நுட்பங்கள் வளர வளர கலாசாரத்திற்கு பாதகமான விளைவுகள் ஏற்படினும் நாம் எமது கலாசாரத்தை எப்படி பாதுகாக்கின்றோம் என்பதுதான் இங்கு முக்கியமான விடயம். அத்தோடு கலாசார சீரழிவுக்கு வெறுமனே பெண்களை மட்டும் குற்றம் சுமத்துவதனையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.



கரைச்சி பிரதேச செயலாளர் நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் சிறினிவாசன், யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் சிவலிங்கராசா, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேல், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சிறிதேவி, பிரதேச செயலர்களான வசந்தகுமார், சத்தியசீலன், முகுந்தன் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் கலைஞர்கள் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஆசிரிய இடமாற்றப் பட்டியல் டிசம்பரில் வெளியிடப்படும்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் இடமாற்ற இறுதிப் பட்டியல் டிசம்பர் நான்காவது வாரத்தில் வெளியிடப்படவுள்ளது. இவ்விடமாற்றங்கள் 2012ஆம் கல்வியாண்டின் ஆரம்பத்தில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்ட ஆசிரியர் ஒருவரின் மேன்முறையீடு பாரதூரமான உடல் சார்ந்த மருத்துவ பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தால் மட்டுமே கருத்திற் கொள்ளப்படும் எனவும் இறுதிப் பட்டியல் டிசம்பர் மாத இறுதியில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (10)

# ஓமந்தை மத்திய கல்லூரி நூற்றாண்டு விழா

(நெல்லியடி)

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

கல்லூரியின் முதல்வர் மூத்த தம்பி அரசரெத்தினம் தலைமையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் நூற்றாண்டு மலர் வெளியீடும் புளியங்குளம் இந்துக் கல்லூரியின் மீனவ நடனமும், ஓமந்தை மத்திய கல்லூரியின் 'அறங்காத்தல்' எனும் நாடகமும் இடம்பெறவுள்ளது. தொடர ந்து மாலை நிகழ்வில் பிரதமவிருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி. எஸ்.எம். சார்ள் கலந்துகொள்ள வுள்ளார்.


இதில் விளையாட்டரங்கம் திறந்து வைத்தலும், நினைவு மரம் நாட்டலும் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய மாணவர்களின் வில்லுப்பாட்டும், கனகரயான்குளம் மகா வித்தியாலய மாணவர்களின் பகட்டு எனும் நாடகமும், ஓமந்தை மத்திய கல்லூரியின் காவடிச்சிந்து நனமும், புதுக்குளம் மகா வித்தியாலய மாணவர்களின் தொடர்புகள் எனும் நாடகமும் இடம்பெறவுள்ளது. (உ-12)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நிறுவுனர் நினைவு தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நாளை சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு ஒறேற்றர் மண்டத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் பேராசிரியர் பி. புவனராஜனும், சிறப்பு விருந்தினராக வருகை நிலை கணக்காளர் என்.கே. கருணை ஆனந்தனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். வாழ்த்துரையினை முன்னாள் அதிபர் க.சிவாஜி வழங்குவார். மாதவி துறவு என்னும் தலைப்பில் அமைந்த நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளது. (44)





சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலையின் வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் ஆகியோர் இணைந்து கட்டடத்தை நாடாவை வெட்டித் திறந்து வைப்பதனையும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம்.

# மருதங்கேணி கோட்ட சிறுவர் தினப் போட்டி முடிவு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் அனுசரணையுடனான மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளின் உலக சிறுவர் தினப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டியில் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

**கீழ்ப்பிரிவு**

சித்திரம்

சி. சரணியா (உடுத்துறை ம.வி), சி.சுலக்ஷன் (மருதங்கேணி இ.த.க.பாடசாலை), செ. அனுஷா (நாகர்கோவில் ம.வி), செ. நிரோஷா (மணற்காடு றோ.க. த.க.பாடசாலை)

**மேற்பிரிவு:**

கட்டுரை

சி.சிந்துஷா (குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை), த. தனுஷா (அம்பன் அ.மி.த.க.பாடசாலை), வ. ஜென்சியா (மணற்காடு றோ.க.த.க.பாடசாலை)

கவிதை

ம. மேரி டிலக்சனா (மணற்காடு றோ.க.த.க.பாடசாலை), யோ. சித்திராதேவி (நாகர் கோவில் ம.வி.), செ. நிரஞ்சனா (உடுத்துறை ம.வி.)

சித்திரம்

அ. பிரிசாந்தன் (உடுத்துறை ம.வி.), சூ. சயந்தாஸ் (செம்பியனபற்று அ.த.க.பாடசாலை), டி. மேனகா (அம்பன் அ.மி.த.க பாடசாலை)

பேச்சு

ர. நிரோஷிகா (அம்பன் அ.மி. த.க. பாடசாலை), அ. அகிதா (உடுத்துறை ம.வித்தி), ரி. தனுஷா (மணற்காடு றோ.க.த.க. பாடசாலை) பு. திவாகர் (ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலை.

கட்டுரை மத்திய பிரிவு

க. சிந்துஷா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி), ஆ. டினோசன் (உடுத்துறை ம.வி.), இ. மஞ்சிகா (அம்பன் அ.மி.த.க. பாடசாலை)

கவிதை

யோ. கீர்த்தனா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி), ஆ. தனுஷா (ஆழியவளை சீ.சீ.த.க.பாடசாலை), ந. டியூசா (மணற்காடு றோ.க.த.க.பாடசாலை)

சித்திரம்

சி. சயந் (மருதங்கேணி இ.த.க.பாடசாலை), ஜெ. நிதர்சன் (செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை), த. மிதுஷன் (குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை)

பேச்சு

எ.மோ. பவுஸ்ரீனா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி), த. பிரிந்தா (ஆழிய வளை சீ.சீ.த.க. பாடசாலை), தி. கௌசிகா (குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை), ல. ராஜனா (அம்பன் அ.மி.த.க. பாடசாலை) (உ-70)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரிக்கை

காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் சில பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், இதனால் அப்பாடங்களை மாணவர்கள் சீராக கற்க முடியாத நிலை காணப்படுவதாக கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். குறிப்பாக கணிதம், ஆங்கிலம், கணனி போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அத்துடன் உடற்கல்விச் செயற்பாடுகளுக்கும் ஆசிரியர் இல்லை.

இதில் கணிதமும், ஆங்கிலமும் முக்கிய பாடங்களாகக் காணப்படுவதால் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் இவற்றை கற்பதற்கு ஆசிரியர்கள் இல்லாது சிரமத்தின் மத்தியில் கல்வியைத் தொடர்கிறார்கள்.

மாணவர்களுடைய கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் கணிணி மற்றும் உடற்கல்விச் செயற்பாடுகள், மாலை நேர வகுப்புகளை மேற்கொள்வதற்கு பழைய மாணவர்கள் முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (50)

# நீர்வளம் காத்து புவி வளம் காப்போம்

(யாழ்ப்பாணம்)

நிலைத்து நிற்கும் அபிவிருத்தி எண்ணக்கரு சம்பந்தமான கருத்துக்கள் வலுப்பெற்றுள்ள தற்போதைய கால கட்டத்தில் அபிவிருத்தி மற்றும் சூழல் ஆகிய அணுகுமுறையினைப் பின்பற்றுதல் அவசியமானது என யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா நீர்வளம் காத்து புவிவளம் காப்போம் என்னும் தலைப்பில் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது யாழ்ப்பாணத்திற் பருவமழை ஆரம்பித்துள்ளது. பருவ மழையினால் தாழ்வான காணிகளில் நீர் தேங்கி நிற்பதனால் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்ற மக்களின் முறைப்பாடுகள் பல கிடைக்கப்பெற்று வருகின்றது. உண்மையில் இது அசௌகரியமான விடயமாகும். எனினும் இதில் உள்ள சாதகத்தன்மையையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது மழைநீரானது தரைமேற்பரப்பினூடாக ஓடி இறுதியில் நீர் நிலைகளை அடைகின்றது. இவ்வாறு நீர் நிலைகளினை அடையும் போது தரைமேற்பரப்பு அரிப்பிற்குள்ளாவதனால் நீர் நிலைகளில் மண் தேக்கப்படுகின்றது. இதனால் நில வளம் பாதிப்படைகின்ற அதேநேரம் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கும் காரணமாக அமைகின்றது.

எனவே இத்தகைய சூழல் பாதிப்புக்கள் ஏற்படுவதனைத் தவிர்க்கும் முகமாக தாழ்வான காணிகளில் தேங்கி நிற்கும் நீரை வடிகால்களில் வெட்டி விடுவதனைத் தவிர்த்து அந்நிலங்களிலேயே அதனைத் தேக்கி வைப்பதன் மூலம் தரைக்கீழ் நீர் வளத்தினைப் பாதுப்பதனூடாக கோடை காலங்களில் ஏற்படும் வறட்சியினைக் கட்டுப்படுத்துவதுடன் சூழல் பாதிப்புக்களையும் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

அத்துடன் க.பொ.த.சாதாரண பரீட்சை நெருங்கிவிட்ட இவ்வேளையில் மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு ஒலி பயனபாட்டில் மு.ப 6.00 - பி.ப 6.00 வரை 63 டெசிபல் மற்றும் பி.ப 6.00 - மு.ப 6.00 வரை 53 டெசிபல் என்ற வரையறையினைப் பின்பற்றுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு சோலர் கருவிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)


அரியாலை கிழக்கு ஜே/90 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அண்மையில் சோலர் கருவிகள் வழங்கப்பட்டன.

இப்பிரதேசத்தில் நீண்டகாலமாக மின்சார வசதிகள் இல்லாது மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் அவற்றை ஓரளவு நிவர்த்தி செய்யும் முகமாக இப்பிரதேசத்தில் உள்ள 15 குடும்பங்களுக்கு சோலர் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் அமைப்பாளர் ஆர். ரவீந்திரதாஸன் இக்கருவிகளை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் சந்திரிக்கா பண்டாரநாயக்கபௌடேசன் அமைப்பின் இணைப்பாளர் ஏ.சஞ்சித் மற்றும் கிராம சேவையாளர் என பலர் கலந்து கொண்டனர். (உ)

# சின்மயாமிஷன் கருத்தரங்குகள் சமயத்தை வளர்க்க உதவுகிறது

## - வடமாகாண கல்விப்பணிப்பாளர்



(யாழ். நிருபர்)

ஆன்மிக உணர்வு மிக்க சமூகப் பிரஜைகளை உருவாக்கும் பணியில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் ஒரு சிலரின் நெறிபிறழ்வினை வைத்துக் கொண்டு சமூகத்தை எவரும் தவறாக எடைபோடக்கூடாது என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் குறிப்பிட்டார்.

இலங்கை சின்மயாமிஷன் வடமாகாணக் கல்வித்திணைக்களத்துடன் இணைந்து நடாத்திய சின்மிய விழுமியக் கருத்தரங்கிற்கு தலைமை வகித்து உரைநிகழ்த்திய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் தீவகம், வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளில் சைவநெறிப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தென்னிந்தியா நாகபட்டினம் சின்மயாமிஷன் சுவாமிகள் இராமகிருஷ்ணானந்தாஜி மங்கலவிளக்கேற்றி கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார். யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் பிரமச்சாரி ஜாக்கிரத் சைதன்யா வரவேற்புரையையும் யாழ். மாவட்ட சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா, வாசுதேவக்குருக்கள் ஆசியுரையையும் வழங்கினார்கள்.

மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தனது தலைமைஉரையில் தொடர்ந்து கூறியதாவது.

எமது நாட்டில்தான் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை சமயக்கல்வி போதிக்கப்படுகிறது. இன்றைய இளைய தலைமுறையினரிடையே ஆன்மீகப் பண்புகள் அருகிவருவதாகக் கூறப்படுகின்ற போதிலும் நோன்புக் காலங்களில் ஆலயங்களில் கூட்டம் அதிகரித்திருப்பதைக் காணமுடிகிறது.

சின்மயாமிஷன் உலகளாவிய ஆன்மிக நிறுவனம் இந்தியாவில் ஆன்மிக விழுமியக் கல்வியைப் போதித்து வருவதுபோல் இலங்கையிலும் சின்மயாமிஷன் தனது வேலைத்திட்டத்தை ஆரம்பித்து பாடசாலை மாணவரிடையே ஆன்மீக விழுமியப் பண்புகளை வளர்க்கும் நோக்கத்துடன் கருத்தரங்குகளை நடத்தி வருகிறார்கள் என்றார்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு தமிழ் நாடு சின்மயாமிஷன் சுவாமி இராமகிருஷ்ணனந்தாஜி சானிறிதழ்களை வழங்கினார். (10)

# வலய மட்ட சித்திரப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மாணவரிடையே சித்திரபாட ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் யாழ். வலய மட்டத்தில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வரமாறு

பிரிவு 1

கருத்து வெளிப்பாடு

தி. நிருபன் (யாழ். இந்துக்கல்லூரி), க.புவியநதன் (யாழ். மத்திய கல்லூரி), உ. ராம்கி (யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரி).

ஆக்க அலங்காரம்

ம.யகிலா (யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரி), மு.நியூசிகா (யாழ். கனகரத்தினம் ம.வி.), றொ. மேரி றொசாந்தினி (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

பொருட் கூட்ட வரைதல்

ர.முகமட்யசார்(யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), க.சிவானுஜன் (யாழ். இந்துக்கல் லூரி), செ.லவோஜன் (யாழ். வாதரவத்தை விக்கினேஸ்வரா)

பிரிவு II

கருத்து வெயிப்பாடு

அ.தனேந்திரன் (யாழ். மத்திய கல்லூரி), கு.மதுர்சிகா (யாழ். சோமஸ்கந்தாக் கல்லூரி), வே.லக்ஷி (யாழ். இந்து மகளிர் கல்லூரி),

ஆக்க அலங்காரம்

ச.சஞ்சீவன் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), வ.மகிசாளினி (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), க.வளர்மதி (யாழ். ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி)

பொருட் கூட்ட வரைதல்

செ. திலக்ஷன் (யாழ். மத்திய கல்லூரி), கெ.றொசான் (யாழ். பெரியபுலம் ம.வி), தி.பார்த்தீபன் (யாழ். உரும்பிராய் இந்துக்கல்லூரி)(உ)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(18.11.2011 –வெள்ளிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 02 ஆம் நாள்.
இராகுகாலம் 10.38-12.08, சுபநேரம் 6.08 -7.38வரை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப . 1.57 வரை
திதி: அட்டமி பி.இ. 3.40 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**- பணம்வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, திடீர் பயணம், உயர்ந்த காரியம், வீண் செலவு.

**ரிஷபம:**-குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம்,மனதில் கவலை, திடீர் அதிர்ஷ்டம், உடல் உபாதை.

**மிதுனம் :**-பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் மந்தம், சுற்றத்தார் ஆதரவு, மருத்துச் செலவு.

**கடகம்:**- குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், அதிகாரப்போட்டி, வீண் வாக்குவாதம், அவசர முடிவு.

**சிம்மம்:**- பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், தொழில் இலாபம், வீண் சர்ச்சை, வெளிநாட்டு செய்திவரும்.

**கன்னி :**- குடும்பத்தில் சபலம், பணக் கஷ்டம், தொழில் நஷ்டம், காரியத்தடை, உடம்பு பலவீனம்.

**துலாம் :**-பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, திடீர் பயணம், வீண் விவாதம் மருத்துச் செல்வு.

**விருச்சிகம்:**-குடும்பத்தில் குதூகலம், பணம் வரும் வீணான கோபம், தொழில் விருத்தி, உடம்பு பலவீனம்.

**தனுசு:**- பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, திடீர் பயணம், தேகம் பலவீனம், மருத்துச் செலவு.

**மகரம:**- குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், துன்பம்கூடும், தேகசுகம் பலவீனம், மனக்கவலை.

**கும்பம் :**- பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, அயலார் தொல்லை, வேலைப்பளு. திடீர் பயணம்.

**மீனம் :**- குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், திடீர் பயணம், தொழில் இலாபம், உடல்பலவீனம்.

# சிறப்பாக நடைபெற்ற சிறுவர், முதியோர் தின விழா

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 2.00 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந. திருலிங்கநாதன் தலைமையில் தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை. செல்வராசா பிரதம விருத்தினராகவும் மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி க.பொன்னையா பருத்தித்துறை இலங்கை வங்கி உதவி முகாமையாளர் எஸ். தவலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்.

மருதங்கேணி கிராம அலுவலர் பூ.வ. தவராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட சிறுவர், முதியோர் ஆகியோருக்கான பரிசில்களை விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபாகள், ஆசிரியர்கள் மாண வர்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலக உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (70)

# நெல்லியடி பஸ் நிலையத்தை சீர் செய்து தருமாறு கோரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி பஸ் நிலையம் மக்களின் பாவனைக்கு ஏற்ற வகையில் சீர்செய்யப்படாது இருப்பதால் மழை காலத்தில் ரேுந்துகளில் பயணம் செய்யும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இப்பஸ் நிலையப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் இங்கு நின்றே பணிகள் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அத்துடன் முச்சக்கர வண்டிகளும், வெள்ளத்திலே நிறுத்தி வைக்கப்படுவதால் அவற்றின் தேவையை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதில் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.


இதேவேளை பஸ்ஸிற்காக காத்திருக்கும் பொதுமக்கள் மழையில் நனைந்தபடியும் வெள்ளத்திலும் நின்றே பயணத்தை மேற்கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவணம் எடுத்து பஸ் நிலையத்தை மக்களின் பாவனைக்கு ஏற்றவாறு சீர் செய்து தருமாறு இப்பகுதிப் பொதுமக்களும், வாகன சாரதிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (உ-18)



சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரத்தின் மணிவிழாவும் சேவை நயப்பு விழாவும் அண்மையில் நடைபெற்ற போது விழா நாயகி கல்லூரி மற்றும் வலிகாமம் வலயக் கல்வி அலுவலக சமூகத்தினரால் ஆராத்தி எடுத்து வரவேற்கப்படுவதைக் காணலாம். (06)

# பண்டாரநாயக்க கல்லூரியை வென்றது பற்றிக்ஸ் கல்லூரி



லிவிங்ரன்

(யாழ்ப்பாணம்)

லிவிங்ரனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் நிகம்பு பண்டாரநாயக்க கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் பிரிவு இரண்டின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி கடந்த 15, 16ஆம் திகதிகளில் நிகம்பு பண்டாரநாயக்க கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய பண்டாரநாயக்க கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இம்புல்லா 25, அவிக்ரா 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லிவிங்ரன் நான்கு, குகபாலா, கிளிங்ரன், டர்வின் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லிவிங்ரன் 42, நோபேட் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முனசிங்க மூன்று, விமல சந்திரா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

14 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பண்டாரநாயக்க கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதில் சமேந்தன 50, முனசிங்க 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நோபேட், லிவிங்ரன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. இதில் மொறிஸ் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். மற்றும் யஸ்ரீன் 19 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

முதல் இனிங்ஸில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முன்னிலை பெற்றமையால் போட்டித் தொடரின் விதிமுறைப்படி வெற்றிபெற்றது.

# விதுசன் சிறப்பான பந்து வீச்சு யாழ். மத்திய கல்லூரி வெற்றி



விதுசன்



கௌதமன்

(யாழ்ப்பாணம்)

விதுசனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயது அணிகளுக்கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த 16ஆம் திகதி சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சென் ஜோன்ஸ் மற்றும் மத்திய கல்லூரி அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கௌரிபாலன், எமில்டன் தலா 13, அஜேய் 12, தீபபிரசாந் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மிகச் சிறப்பாகச் செயற்பட்ட விதுசன் 10 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங் களைக் கொடுத்து எட்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஏனைய இரண்டு விக்கெட்டுக் களும் ரன் அவுட் மூலம் வீழ்த்தப்பட்டது.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங் கிய யாழ். மத்திய கல்லூரி அணி சகல விக் கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. இதில் கௌதமன் 51, செந்தூரன் 23, பிரியலக்சன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரேசான் மூன்று, லெனி, கருஞன், மதுசன் தலா இரண்டு விக்கெட்டுக் களை வீழ்த்தினர்.

போட்டி விதிமுறைப்படி முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்றமையால் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

# யங்கமன்ஸ் கால்பந்துத் தொடர் கிண்ணம் வென்றது மனோகரா

விளையாட்டுச் செய்திகள்



(நெல்லியடி)

யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை அல்வாய் மனோகரா அணி கைப்பற்றியது.

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடமராட்சி பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடந்த இத்தொடர் யங்கமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை மின்னொளியில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் அல்வாய் மனோகரா அணியும், நவிண்டில் கலைமதி அணியும் மோதின.

போட்டி ஆரம்பமாகியதும் இரு அணிகளும் கோலைப் போட்டுக் கொள்ள கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டது. இரு அணிகளின் பின்கள வீரர்களைத் தாண்டிச் செல்ல முடியாத அளவிற்கு பலமான வரிசையாக பின்களம் அமைந்திருந்தது. இதன் காரணமாக போட்டி சமநிலையில் நிடைவடைந்தது. இதனை அடுத்து தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மனோகரா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் சக்கோட்டை சென் சேவியர் அணியும், வதிரி டயமன்ஸ் அணியும் மோதின.

முற்பாதி ஆட்டத்தின் ஏழாவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் ஒரு கோலைப் போட்டார். பிற்பாதி ஆட்டம் நிறைவில் 1-0 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி முன்னிலை வகித்தது.

பிற்பாதியில் தமது ஆட்டத்தில் வியூகங்களை வகுத்து களமிறங்கிய சென் சேவியர் அணி 18, 20ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது.

தொடர்ந்து ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியபோதும் இரு அணிகளாலும் மேலதிகமாக கோல் எதனையும் போட முடியவில்லை. இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற சேன் சேவியர் அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் கலந்து கொண்டு வெற்றிபெற்ற அணிகளுக்கு கிண்ணம் வழங்கிக் கௌரவித்தார். (12)



உடுவில் கல்விக் கோட்ட கால்பந்து தொடரின் 16 வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட ஏழாலை ஸ்ரீமுருகன் அணி வீரர்களைக் காணலாம். இப்போட்டித் தொடரில் இனுவில் மத்திய கல்லூரி அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. (படம் : தயாளபாலன்)

# நவஜீவன் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மட்டத்தில் கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரில் நவஜீவன் அணி சம்பியனானது.

கடந்த செவ்வாய்க்கிழமை யங்கமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் டயமன்ஸ் அணியை எதிர்த்து நவஜீவன் அணி மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நவஜீவன் அணி 16 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிருசாந் 56, நிசாந்தன் 12, உசா 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தினேஸ் மூன்று சுவேந்திரா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய டயமன்ஸ் அணி 11 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சுவேந்திரா, நிசாந்தன் தலா 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உசா, நிசாந் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த விக்கெட் காப்பாளராகவும் நவஜீவன் அணியைச் சேர்ந்த நிருசாந் தெரிவானார்.

இப்போட்டி நிகழ்வில் அரச, அரச சார்பற்ற உயர் அதிகாரிகள், இரு அணிகளின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (93)

# மே.தீவு இனிங்ஸ் தோல்வி தொடரை வென்றது இந்தியா

(கொல்கத்தா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இனிங்ஸ் மற்றும் 15 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றியது.

மேற்கிந்தியத்தீவு, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி கொல்கத்தாவில் நேற்று நிறைவடைந்தது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 631 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதில் ராவிட், லக்ஸ்மன், டோனி சதம் பெற்றனர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி



சதம் பெற்ற பிராவோவுக்கு கைலாகு கொடுக்கும் சச்சின்..

சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிராவோ 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஓஜா நான்கு, உமேஷ் யாதவ் மூன்று, அஷ்வின் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

478 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 463 ஓட்டங்களைப் பெற்று இனிங்ஸ் தோல்வியைத் தழுவியது. இதில் சிறப்பாக ஆடிய பிராவோ 136 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் எட்வேட்ஸ் 60, சாமு வேல்ஸ் 84, சந்தர்போல் 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமேஷ் யாதவ் நான்கு, அஷ்வின், இஷாந் சர்மா, ஓஜா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக லக்ஸ்மன் தெரிவானார். மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஒரு போட்டி மீதமுள்ள நிலையில் 2-0 என்ற கணக்கில் இந்திய அணி தொடரைக் கைப்பற்றியது.

## ஒரு நாள் அணி நேற்று அறிவிப்பு

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஜாசன்முகமது, சுனில் நரீன் ஆகிய 2 புதுமுக வீரர்கள் அணியில் இடம் பெற்றுள்ளனர். ஜாசன் முகமது உள்ளூர் போட்டியில் சிறப்பாக விளையாடியதால் வாய்ப்புக் கிடைத்துள்ளது. சுனில்நரீன் சம்பியன் லீக் போட்டியில் 10 விக்கெட் கைப்பற்றினார். இதனால் அவருக்கும் அணியில் இடம் கிடைத்தது.

அணி வீரர்கள் விவரம்:

டரன் சமி (கப்டன்), அட்ரியன் பரத், டரன் பிராவோ, சாமு வேல்ஸ், லெண்டில் சிம்மன்ஸ், ஹியாட், அந்தோணி மார்ட்டின், ஜான்சன் முகமது, சுனில்நரீன், பொல்லர்ட், போவெல், ராம்டீன், ராம்போல், ரஸ்சல், றோச்.

## யூரோ கிண்ணக் கால்பந்து தகுதி ஆட்டங்கள் நிறைவு

(லண்டன்)

யூரோ கிண்ண கால்பந்து போட்டித் தொடருக்கு தகுதி பெற்றுள்ள அணிகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த யூரோ கிண்ண கால்பந்துப் போட்டியை உக்ரைன், போலந்து ஆகிய நாடுகள் இணைந்து நடத்துகின்றன. இந்த போட்டி அடுத்த ஆண்டு (2012) ஜூன் எட்டாம் திகதி முதல் ஜூலை முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

போட்டியை நடத்தும் போலந்து, உக்ரைன் அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. மற்ற 14 அணிகள் தகுதிச் சுற்று போட்டி மூலம் தகுதி பெற்றுள்ளன.

இத்தொடருக்கு தகுதி பெற்ற அணிகள் வருமாறு: போட்டியை நடத்தும் உக்ரைன், போலந்து நாட்டுடன், ஸ்பெயின், நெதர்லாந்து, ஜேர்மனி, சுவீடன், இங்கிலாந்து, கிரீஸ், பிரான்ஸ், டென்மார்க், ரஷ்யா, இத்தாலி, செக் குடியரசு, குரோஷியா, அயர்லாந்து, போர்த்துக்கல் ஆகிய அணிகளும் தகுதி பெற்றுள்ளன.

## நட்பு ரீதியான கால்பந்து எகிப்தை வீழ்த்திய பிரேசில்

(கட்டார்)

சர்வதேச நட்பு கால்பந்துப் போட்டியில் பிரேசில் அணி எகிப்தை வீழ்த்தியது.



கட்டாரின் அல்-ரேயான் மைதானத்தில் நடந்த இப் போட்டியில் பிரேசில், எகிப்து அணிகள் மோதின. தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய பிரேசில் அணிக்கு ஜோனாஸ், 39ஆவது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார்.

தொடர்ந்து அசத்திய இவர் 59ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். எகிப்து அணி கடைசி வரை போராடிய போதும், பதில் கோல் அடிக்க முடியவில்லை. முடிவில் 2-0 என்ற கோல் கணக்கில் பிரேசில் அணி வென்றது.

## மெஸ்ஸி, அகுயரோ அபாரம் ஆர்ஜென்ரீன அணி வெற்றி

(பாரன்குயிலா)

உலகக் கிண்ணக் கால்பந்து தகுதிச் சுற்று போட்டியில் ஆர்ஜென்ரீனா அணி, கொலம்பியாவை வீழ்த்தியது.



வரும் 2014இல் உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டி நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் உலகின் பல இடங்களில் நடக்கிறது. கொலம்பியாவில் நடந்த போட்டியில் ஆர்ஜென்ரீனா-கொலம்பியா அணிகள் மோதின. விறு விறுப்பான போட்டியின் முதல் பாதி முடிய, ஒரு நிமிடத்துக்கு முன், கொலம்பியாவின் டொர்லன் பபர்ன் ஒரு கோல் அடித்தார். இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட ஆர் ஜென்ரீனா அணிக்கு, நட்சத்திர வீரர் மெஸ்சி 60ஆவது நிமிடத் தில் ஒரு கோல் அடித்தார். 84ஆவது நிமிடத்தில் அகுயரோ ஒரு கோல் அடிக்க, ஆர்ஜென்ரீனா அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


## சாய்னா வெற்றி

(கவுலூன்)

ஹொங்கொங் ஓப்பன் பட்மின்ரன் தொடரின் முதல் சுற்றில், இந்திய வீராங்கனை செய்னா நேவல் வெற்றி பெற்றார்.

ஹொங்கொங்கில் உள்ள கவுலூன் நகரில், ஹொங்கொங் ஓப்பன் பட்மின்ரன் தொடர் நடக்கிறது. பெண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் செய்னா நேவல், ஹொங்கொங்கின் டிஸ் காசனை எதிர்கொண்டார். இதில் அபாரமாக ஆடிய செய்னா 21-4, 21-17 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். இரண்டாவது சுற்றில் செய்னா, நெதர்லாந்தின் ஜிய்யவோவைச் சந்திக்க உள்ளார்.

## ஸ்மித் அதிருப்தி




(டர்பன்)

டெஸ்ட் சம்பியன் ஷிப் தொடர் பிற்போடப்பட்டுள்ளமை அதிருப்தி தரும் தகவலாகவே நான் பார்க்கின்றேன் என தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் தலைவர் கிரஹம் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை இந்தத் தீர்மானத்தை எடுத்தமைக்கு நியாயமான காரணம் ஒன்று இருக்கும். எனினும் இந்த முடிவானது கிரிக்கெட்டினை பொறுத்தவரை சரியான முடிவல்ல என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும் என அவர் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த டெஸ்ட் சம்பியன் ஷிப் தொடரை 2017 ஆம் ஆண்டு வரை பிற்போடுவதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்ததைத் தொடர்ந்து அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 90களில் எல்லா அணிகளும் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளன



1990ஆம் ஆண்டுகளில் எல்லா அணிகளும் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டன என்று சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவு முன்னாள் தலைவர் போல் காண்டன் தெரிவித்துள்ளார்.

1990ஆம் ஆண்டுகளில் சில கட்டங்களில் எல்லா அணிகளுமே கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டன. 1990ஆம் ஆண்டு முடிவுகளில் டெஸ்ட் மற்றும் உலகக் கிணணப் போட்டிகளில் பல ஆட்டங்களில் தொடர்ச்சியாக சூதாட்டம் நடந்து இருக்கிறது.

1999-2000ஆம் ஆண்டுகளில் இந்திய துணைக் கண்ட அணிகள் மட்டுமின்றி பல அணிகள் சூதாட்டத்தில் ஈடுபட்டன. சர்வதேசப் போட்டிகளில் சில சமயங்களில் எல்லா அணிகளில் இருந்தும் சில வீரர்கள் இது போன்ற தவறான செயலில் ஈடுபட்டனர்.

அந்தக் கால கட்டத்தில் விளையாடிய வீரர்கள் அனைவருக்கும் தங்களை சுற்றி என்ன நடக்கிறது என்பது தெரியும். இருப்பினும் அதுபற்றி அவர்கள் வாய் திறக்காமல் மௌனம் காத்தனர். 2001ஆம் ஆண்டு தான் சூதாட்ட பிரச்சினை வெளியே கசிந்து முடிவுக்கு வந்தது.

இந்த சூதாட்ட கலாசாரம் இங்கிலாந்து கவுன்டி போட்டியில் இருந்து தான் ஆரம்பமானது. பணத்துக்காக நடக்காவிட்டாலும், லீக் போட்டியில் அணிகள் முன்னேற்றம் காணுவதற்காக சூதாட்டத்தில் ஈடுபட்டனர். இது விரைவில் மற்றப் போட்டிகளுக்கும் பரவியது.

2003ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் ஸ்பொட் பிக்சிங் சூதாட்டம் நடந்து இருப்பதை தெளிவாகக் காணலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டில் தான் ஊழல் தடுப்புப் பிரிவை சர்வதேச கிரிக்கெட் சபை அமைத்தது. அதன் பின்னர் தான் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் கப்டன் குரோனே சூதாட்டத்தில் சிக்கியது பரபரப்பானது. சமீபத்தில் பாகிஸ்தான் அணியில் 3 வீரர்கள் ஸ்பொட் பிக்சிங்“ சூதாட்டத்தில் ஈடுபட்டு லண்டன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.


## மூன்றாவது போட்டி இன்று

(அபுதாபி)

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்றைய தினம் அபுதாபியில் நடைபெறவுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் ஏற்கவே நிறைவடைந்த இரு போட்டிகளிலும் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பதிவாக்கியுள்ளன. இந்நிலையில் இன்றைய போட்டியில் வெற்றிபெற இரு அணிகளுமே கடுமையாகப் போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அமெரிக்காவுக்கு தடை விதிப்பு



உலகக் கிண்ணக் கபடிப் போட்டியில் விளையாடி வரும் அமெரிக்க வீரர்கள், ஊக்கமருந்து சோதனைக்கு சிறுநீர் மாதிரிகளை கொடுக்க மறுத்ததால் அந்த அணிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் ஏற்கெனவே 38 வீரர்கள் சிக்கியுள்ள நிலையில், இப்போது அமெரிக்க அணிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து போட்டி ஏற்பாட்டுக் குழுச் செயலரும், இந்திய ஹொக்கி அணியின் முன்னாள் கப்டனுமான பர்கத் சிங் கூறியது: 4 அமெரிக்க வீரர்கள் ஊக்க மருந்துச சோதனைக்கு சிறுநீர் மாதிரிகளை தர மறுத்துவிட்டனர். ஊக்க மருந்துச் சோதனை விதிப்படி ஒரு வீரர், சிறுநீர் மாதிரிகளைக் கொடுக்க மறுத்துவிட்டாலே அவர் ஊக்கமருந்து உட்கொண்டவர் ஆகிவிடுவார். இதுதவிர 4 அமெரிக்க வீரர்கள் ஊக்கமருந்து உட்கொண்டது சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றார்.

இதுவரை 38 பேர் ஊக்கமருந்து உட்கொண்டதாக பிடிபட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இத்தாலி, ஸ்பெயின், ஜேர்மனி, அவுஸ்ரேலியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகளுடைய கடல் நடவடிக்கைகளை விசாரணை செய்ய ஐ.நா.அமைப்பு இணக்கம்

(கொழும்பு)

புலிகள் கப்பல்களை இயக்குவது எவ்வாறு என்று விசாரணை நடத்துமாறு ஐ.நா முகவர் அமைப்பான அனைத்துலக கடல்சார் கழகத்திடம் இலங்கை கடற்படை கேட்டுக்கொண்டுள்ளது.

காலியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கடல்சார் பாதுகாப்புக் கலந்துரையாடலில் பங்குபற்றிய அனைத்துலக கடல்சார் கழகத்தின் பிராந்திய இணைப்பாளர் பிறென்டா பிமென்டலிடம் இதுதொடர்பாக இலங்கை கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதி றியர் அட்மிரல் கொலம்பகே கேள்வி எழுப்பியுள்ளார்.

அனைத்துலக கடல்சார் கழகத்தில் உள்ள குறைபாடுகளை கண்டறிவதற்கு விசாரணை நடத்துமாறும், மாற்று நடவடிக்கை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். புலிகளின் முறைகேடான நடவடிக்கை தொடர்பாக ஐ.நா. முகவர் அமைப்பு வழக்குப் பதிவு செய்வது தொடர்பாக ஆராய முடியும் என்றும் றியர் அட்மிரல் கொலம்பகே கூறியுள்ளார்.

புலிகளின் கப்பல்கள், அனைத்துலக சட்டங்களைப் பெறுமதியிழக்கச் செய்துள்ளன. அனைத்துலக கப்பல் நடவடிக்கைகள் பல சட்டங்களின் கீழ் இயக்கப்படுகின்ற போதும் புலிகள் அவற்றில் இருந்து தப்பித்துக் கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, ஐ.நா. முகவர் அமைப்பான லண்டனை தளமாகக் கொண்ட அனைத்துலக கடல்சார் கழகத்திடம் இந்த விவகாரத்தை இலங்கைக்குக் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்வதாக அதன் பிராந்திய இணைப்பாளர் வாக்குறுதி அளித்துள்ளார்.

இதேவேளை, புலிகளால் நீண்டகாலத்துக்குத் தப்பிக் கொள்ள முடியாது, அனைத்துலக சமூகம் இலங்கையின் வேண்டுகோளுக்கு விரைவிலேயே நடவடிக்கை எடுக்கும் என்று றியர் அட்மிரல் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

# இல்லச் சிறுவர்களினுடைய கைது நடவடிக்கை தடுப்பு



(கொழும்பு)

ரன்முத்துகல சிறுவர் இல்லத்திலுள்ள சிறுவர்கள் சிலரை பொலிஸார் கைது செய்யவிருந்த நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கிறது.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் குறித்த சிறுவர்களை கைது செய்ய தயாரானதை அறிந்து கொண்டவுடன் தாம் குறித்த இடத்தற்குச் சென்றதாக அதிகார சபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவிக்கிறார்.

அதன் பின்னர் அதன் சட்ட நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தி சிறுமிகளை கைது செய்யவிருந்த நடவடிக்கையைத் தடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார். இதன்போது ரன்முத்துகல சிறுவர் இல்லம் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகளால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன் நாளாந்த நடவடிக்கை மற்றும் நிர்வாக வியூகம் பெண் பிள்ளைகளுக்கு தகுந்த மட்டத்தில் இல்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இரட்டை குடியுரிமையாளர்களுக்கு விசேட அடையாள அட்டை

(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமையுடைய இலங்கையர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. இலங்கைப் பிரஜையாக இருந்து பின்னர் இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொண்டவர்களுக்கு இந்த விசேட அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விசேட அடையாள அட்டை விநியோகம் செய்யப்படவுள்ளது. அடுத்த மாதம் முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவகர் அல்லது பிரதேச செயலாளர்களின் ஊடாக தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ள விண்ணம் செய்ய முடியும். இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொண்டவர்களுக்கு அடையாள அட்டை விநியோகம் செய்யும் நோக்கில் தனியான அலகு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இரட்டைக் குடியுரிமை உடையவர்களுக்கு இலங்கைப் பிரஜைகள் என்பதனை உறுதி செய்வதற்கான எந்தவொரு ஆவணமும் வழங்கப்படவில்லை எனவும் முதல் தடவையாக இவ்வாறு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஜனாதிபதி பதவிப்பிரமாண தினத்தில் மாபெரும் அன்னதானம் ஆரம்பம்



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்து கொண்ட தினத்தை முன்னிட்டு மாபெரும் அன்னதான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அனுராதபுரம் பிரதேசத்தில் இந்த மாபெரும் அன்னதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனுராதபுரம், ருவன்வெலிமஹாசேயா, ஜயஸ்ரீமா போதி உள்ளிட்ட முக்கிய பௌத்த மதத் தளங்களில் வழிபாடு செய்ய வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது. சுமார் ஓராண்டு காலம் தொடர்ச்சியாக பக்தர்களுக்கு பகல் போசனம் இலவசமாக வழங்கப்படவுள்ளது. நாளை இந்த இலவச பகல் போசன விருந்துபசாரம் ஆரம்பிக்கப்படும் என விவசாய அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

# அதிவேக வீதியில் பயணிகள் பஸ் சேவை



(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியை திறந்து வைக்கும் முதல் நாள் இரண்டு பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த இலங்கைப் போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதியிலிருந்து சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள குறிதத பஸ் வண்டிகள் ஒரு மணித்தியாலத்தில் காலியிலிருந்து கொட்டாவ வரை பயணிக்கும் எனவும், அதற்கான கட்டணம் தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை எனவும் சபையின் தலைவர் எம்.டீ.பந்துசேன தெரிவித்தார்.

அவை சொகுசு பஸ்கள் என்பதுடன் பஸ்ஸின் அனைத்து ஆசனங்களிலும் பயணிகள் பாதுகாப்புப் பட்டிகளை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைப் போக்குவரத்து சபையின் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

# பாடசாலைகளில் மாணவர்களை இணைப்பதாக பண மோசடியில் ஈடுபட்டவர்கள் கைதாகினர்

(கொழும்பு)

கண்டி மற்றும் நீர்கொழும்பு பகுதிகளில் அமைந்துள்ள பிரபல பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான போலி ஆவணங்களைக் காட்டி பொதுமக்களிடமிருந்து மூன்று மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பண மோசடியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் முன்னாள் பொலிஸ உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இவருக்கு உதவியளித்ததாகத் தெரிவிக்கப்படும் பெண்கள் இருவரும் மத்திய மாகாண பொலிஸ் நடவடிக்கைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் முன்னாள் சிரேஷ்ட கடற்படை உத்தியோகத்தரின் மனைவி ஆவார், மற்றையவர் விசேட அதிரடிப் படை சார்ஜன்ட்டின் மனைவி ஆவார். இந்த மோசடிச் சம்பவத்தில் இவ்விரு பெண்களும் நேரடியாக ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

வீரவில பகுதியைச் சேர்ந்த இப்பிரதான சந்தேக நபர் முருங்கன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்தபோது வேலையை விட்டு இடைவிலகிச் சென்றுள்ளார். இச்சந்தேக நபருக்கு எதிராக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டபோது அவரிடமிருந்து சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் பல கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# விரைவு மின்சார ரயில் சேவை இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளது

## ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர்

(கொழும்பு)

கொழும்பு மற்றும் சனநெரிசல் மிக்க நகரங்களை அண்மித்த பகுதிகளில் மின்சார ரயில் சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையின் ஒத்துழைப்புடன் இந்த போக்குவரத்து சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் மற்றும் மேல்கொத்மலை மின் உற்பத்தி செயற்றிட்டம் என்பவற்றுடன் ஒத்ததாக சனநெரிசல் மிக்க நகரங்களை அண்மித்த பகுதிகளில் மின்சார ரயில் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை ரயில்வே திணைக்களமும், போக்குவரத்து சபையும் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. முதற்கட்டமாக வெயாங்கொடையிலிருந்து களுத்துறை வரை மின்சார ரயில் சேவையை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகிறார். மிகவும் விரைவான சொகுசு ரயில் சேவையை மக்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமென அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

# நிவாரணக் கிராமத்துச் சிறுமி லொறி மோதி பரிதாப மரணம்

(வவுனியா)

வவுனியா - செட்டிக்குளம் - கதிர்காமர் நிவாரணக் கிராமத்திற்கு அருகில் இடம்பெற்ற வீதி விபத்தில் நிவாரணக் கிராமத்தைச் சேர்ந்த 11 வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். மன்னார் - மதவாச்சி வீதியில் மதவாச்சி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த லொறியொன்று வீதியைக் கடக்க முயன்ற சிறுமி மீது மோதியுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இவ்விபத்தில் செட்டிக்குளம் கதிர்காமர் நிவாரணக் கிராமத்தைச் சேர்ந்த 11 வயதுடைய கிராந்து வின்சினா என்ற சிறுமி உயிரிழந்துள்ளார். சடலம் செட்டிக்குளம் வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்கென வைக்கப்பட்டுள்ளது. விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஒரே நாள் சேவை திட்டத்தின் கீழ் இருமணி நேரத்தில் அடையாள அட்டை

## அடுத்த ஆண்டு முதல் அமுல்

(கொழும்பு)

ஒரே நாள் சேவையின் கீழ் இரண்டு மணி நேரத்தில் தேசிய அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கை 2012 ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஜகத் பீ.விஜேவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு - 05 கெப்பிட்டிபொல மாவத்தையிலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் விசேட செய்தியாளர் மாநாடொன்று நடைபெற்றபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

தினமும் சுமார் 1000 பேர் ஒரே நாள் சேவையின் கீழ் அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக திணைக்களத்துக்கு வருகை தருகின்றனர். திணைக்களத்தின் ஏனைய கருமங்களுடன் ஒரே நாள் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது காலதாமதம் ஏற்படுவதுடன் விண்ணப்பதாரிகளும் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர். இதன் காரணமாக திணைக்களப் பிரதேச கட்டடத்துடன் கூடிய புதிய கட்டடத்தினுள் ஒரே நாள் சேவை மையம் அமையவுள்ளது.

விண்ணப்பதாரிகளின் படிவங்களை பெற்றுக்கொள்வது முதல் அடையாள அட்டையை வழங்குவது வரை இலத்திரனியல் முறையில் இலக்கங்கள் வழங்கப்படும். திரையில் தமக்குரிய இலக்கம் தெரிந்தவுடன் விண்ணப்பத்தை ஒப்படைக்கலாம். அதேபோன்று புதிய அடையாள அட்டை 2 மணி நேரத்துள் தயாரானவுடன் விண்ணப்பதாரிக்குரிய இலக்கம் திரையில் தெரிவிக்கப்படும்.

உரிய விண்ணப்பதாரி கால் கடுக்க நீண்ட நேரம் வரிசையில் நிற்க வேண்டிய தேவை ஏற்படமாட்டாது. தினமும் பிற்பகல் 2.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்க அனுமதி இல்லை



(கொழும்பு)

சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாதென கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் எரிவாயு விலையை அதிகரிக்க லாப் கேஸ் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அதற்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதி வழங்காது எனவும் தெரிவித்தார்.

உலக சந்தையில் சமையல் எரிவாயு விலையுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் அதன் விலையை அதிகரிக்க வேண்டிய தேவை கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

30. தளையின் வகைகள் எத்தனை? - 07
31. இரண்டு முதலிய சீர்களைக் கொண்டு முடிவது.........ஆகும். - அடி
32. அடி எத்தனை வகைப்படும்? - 05
33. எழுவாய் வேற்றுமை என அழைக்கப்படுவது - முதலாம்
34. போலி எழுத்தாலான சொல்லைத் தருக. - ஐஞ்ஞூறு
35. சுட்டெழுத்தினால் ஆக்கப்பட்ட சொல்லைத் தருக. - இந்த மரம்
36. வினாவெழுத்தால் ஆக்கப்பட்ட சொல்லை எழுதுக. - எங்கே
37. "தடாகங்களில் அழகிய தாமரைப் பூக்கள் பூத்துக் குலுங்கின" இதில் வந்துள்ள பெயரடையினைக் குறிப்பிடுக. - அழகிய
38. "மாணவர்கள் விரைவாக ஓடினர்" இதில் வந்துள்ள வினையடையினைக் குறிப்பிடுக. - விரைவாக
39. சொல்லாக்கத்தில் சொல்லின் இறுதியில் இடம்பெறாத உயிர் எழுத்துக்கள் - எ, ஒ, ஔ
40. "மடங்கலந்த" இதில் வந்துள்ள சார்பெழுத்து எவ்வகையைச் சார்ந்தது - ஒற்றளபெடை
41. "வாவெண்ணிலா" இதில் வந்துள்ள சார்பெழுத்து எவ்வகையைச் சார்ந்தது - உயிரளபெடை
42. பெய்து, மார்பு என்பன எவ்வகையான குற்றியலுகரங்கள் - இடைத்தொடர் குற்றியலுகரம்
43. "அவன் வந்தது" இதில் வந்துள்ள வழு - திணைவழு
44. "அவள் வந்தான்" இதில் வந்துள்ள வழு - பால்வழு
45. "அவன் வந்தேன்" இதில் வந்துள்ள வழு - இடவழு
46. "நேற்று வருவேன்" இதில் வந்துள்ள வழு - காலவழு
47. "யானை இடையன் எங்கே" இதில் வந்துள்ள வழு - மரபுவழு
48. "வானக்கடலிடை வெண்ணிலாவே" இதில் வந்துள்ள அணி - உருவக அணி
49. 'புதிய வானம் புதிய பூமி - எங்கும் பனிமழை பொழிகிறது. நான் வருகையிலே என்னை வரவேற்று - வண்ணப் பூ மழை பொழிகிறது. இதில் வந்துள்ள அணி - தற்குறிப்பேற்ற அணி
50. 'ரமணன் தேன் போன்ற குரலால் இனிமையாகப் பாடினான்' இதில் வந்துள்ள அணி - உவமை அணி
51. "புயல்தொடு நெடுநிலை மாடத்தின்னகர் புகலுமா றெனவோ" இதில் வந்துள்ள அணி - உயர்வு நவிற்சி அணி
52. "முல்லை சூடினாள்" என்பது - பொருளாகு பெயர்
53. "பொரியல் உண்டான்" என்பது - தொழிலாகு பெயர்
54. "எனக்கு இரண்டு மீற்றர் போதும்" என்பது - நீட்டலளவையாகு பெயர்
55. "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பது - எண்ணலளவையாகு பெயர்
56. "பயிற்றங்காய் நடக்கிறது" என்பது - உவமையாகு பெயர்
57. "சிவபுராணம் ஓதினான்" என்பது - கருவியாகு பெயர்
58. "பாரதியாரைப் படித்தான்" என்பது - கருத்தாவாகு பெயர்
59. "கொழும்பு சிரித்தது" என்பது - இடவாகு பெயர்
60. "அரை இறாத்தல் தாருங்கள்" என்பது - எடுத்தலளவையாகு பெயர்
61. "கருநீலம் சூடினாள்" என்பது - பண்பாகு பெயர்
62. "இளவேனில் சிரித்தது" என்பது - காலவாகு பெயர்





திரு. T.S.குகன்
(ஆசிரியர்)

# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 2 மணி

# கல்வி முரசு

## தமிழ்மொழியும் இலக்கியமும் - பகுதி III



**பாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

**முக்கியம்:**
i) அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
ii) 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும், 5, 6, 7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
iii) இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01. 1) "திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம் பேய்
வெண்டாமரையாய் வெளுத்தவே"
அ) இப்பாடலடி இடம்பெறும் நூல் எது? இதனைப் பாடியவர் யார்?
ஆ) இப்பாடலடி இடம்பெறும் அணி எது?

2) குடிதழீ இகோல் ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.
அ) அக்குறட்பா இடம்பெறும் அதிகாரம் யாது?
ஆ) இக்குறட்பாவின் கருத்தை எழுதுக.

3) "நீ வேண்டுமானால் பாரேன் எழும்பூர் ஸ்டேஷனில் வந்து இருக்கப் போகிறிர்" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

4) நல்ல மரமும் நஞ்சு மரமும் எனும் பாடத்தில் கல்வியும் செல்வமும் பூத்தமேலோர் எவ்வாறு விளங்குவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது?

5) கையில் வெண்ணெயிருக்க நெய் தேடி அலையும் வெள்ளியரும் உண்டென்பதை இன்று நேராக அறிந்தேன்.
அ) இக்கூற்று கூறக் காரணம் என்ன?
ஆ) இக்கூற்று இடம்பெறும் கட்டுரை யாது?

6) எத்தகைய அரசனின் நாடு பயனிழக்கும் எனத் திருவள்ளுவர் கூறுகிறார்?

7) "உயர்ந்த பெரியோரோடு சிறியார் சேர்ந்தால் சிறியாரின் குறைகள் நீங்கிவிடும்" என்பதை விளக்க ஆசிரியர் கையாண்ட எடுத்துக் காட்டுக்களை கூறுக?

8) கல்வியே அழியாச் செல்வம் என்ற கட்டுரையின் எம்மை அறியாமை முடியுள்ளது என்பதை விளக்க, கையாண்டுள்ள உவமைகளைத் தருக.

9) முன்னோர்க்கு எனும் கவிதையில் கவிஞர் கூற முற்படும் விடயம் யாது?

10) கண்ணில் சிறந்த.........என்ற பாடலூடாக சிறந்தவை எனக் குறிப்பிடப்படுபவை எவை?

02. பின்வரும் செய்யுள் பகுதிகள், ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்பினை விளக்கி எழுதுக.

1) மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம்.

2) மல்லல் மறுகில் மடநா குடனாகச்
செல்லும் மழவிடை போற் செம்மாந்து - மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன்

3) மனிதனின் வாழ்விலும் பெருமை இருக்க வேண்டும். சாவிலும் பெருமை இருக்க வேண்டும் மனிதனாக வாழ்ந்து தெய்வமாக மறைய வேண்டும். கேவலம் பறவையாக வாழ்ந்த ஜடாயுவே தெய்வ மரணம் எய்தினால், அற்பத்தில் ஒரு ஜீவன் மடிவது இழிவான வாழ்க்கையைவிடக் கீழ்ப்பட்டது. ராவணன், நான் படைக்கும் ராவணன், பட்டனன் என்ற போதும் எளிமையில் படுகிலேன் யான் என்று பேசுவான். பறவையும் **அரக்கனும் கூட அஞ்சும் அற்ப மரணத்தைக் கவிச்சக்கரவர்த்தி விரும்புவதா? கேவலம்.**

4) வறுமையால் வருந்தி வந்தவரை இனிய முகத்தோடு ஏற்று அவரது குறையை நிறைவு செய்வதே அறிவுடைய செல்வர் செயலாகும். ஆற்று வழியாகவும், ஊற்று வழியாகவும், நன்னீரைத்தன் அகத்தே நிரப்பிக் கொள்ளும் இப்பொய்கை போல், அறிவுடையோர் நல்வழியாய் ஈட்டியப் பெரும் பொருள் நிறைந்த பண்ணைகளாய் விளங்குவார்கள். **நீர் நிறைந்த பொய்கை எப்பொழுதும் தண்மை வாய்ந்து விளங்குதல் போல, அறிவுடைய செல்வரும் ஈரம் வாய்ந்த நெஞ்சினராய் இலங்குவார்கள்.** தாகத்தால் வருந்தி வருவோருக்குத் தடையின்றி நீர் வழங்கும் தடாகம்போல் கல்வியும் செல்வமும் பூத்த மேலோர். அறிஞர்க்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாய் விளங்குவார்கள்.

03. 1) அ. நிழலின் நினைவு என்ற கவிதை மூலம் தான் கூற வந்த விடயத்தை வெளிப்படுத்தக் கவிஞர் கையாண்டுள்ள உத்திகள் பற்றி விளக்குக.

ஆ. வேம்பு பற்றிய கவிஞர் வருணனையில் காணப்படும் சிறப்பம்சங்களை விளக்குக.

அல்லது

பார்வைகள் என்ற சிறுகதையில் "ஒரு தனிமனிதனின் ஆளுமைகள் சமூகத்தின் வேறுபட்ட தளங்களுக்கேற்ப மாறுபட்டுத் தோன்றலாம்" என்ற கூற்றுக்கு தர்மலிங்கம் என்ற பாத்திரம் எவ்வாறு பொருந்துகின்றது?

04. 1) மலையகத் தொழிற்பாடலில் பெண்ணின் மன உணர்வு வெளிப்படுத்தப்படும் பாங்கினை விளக்குக.

2) நாட்டார் பாடல்களில் மீன்பிடித் தொழிலின் சிறப்பு எவ்வாறு கூறப்படுகின்றது?

அல்லது

1) சேர மன்னன் மீது காதல் கொண்ட பெண்ணின் நிலையும், சேர மன்னனின் யானையின் வீரமும்.

2) பாண்டிய மன்னனிடம் உள்ளம் பறிகொடுத்த பெண்ணின் நிலையும், பாண்டிய மன்னனின் யானையின் வீரமும்.

**5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.**

05. அ) சொல்லுக சொல்லை..........................................................

ஆ) சொல்ல வல்லன்..........................................................

இ) பொருள் தீர்ந்த பொச்சாந்தும்..........................................................

ஈ) மாசற்ற அறிவுடையோர்..........................................................

என்று தொடங்கும் குறட்பாக்களில் வள்ளுவர் கூறும் கருத்தினைத் தொகுத்து எழுதுக.

06. தனிப்பாடல்களில் காளமேகப் புலவரின் நகைச்சுவை பாங்கும் இராமச்சந்திர கவிராயரின் நகைச்சுவைப் பாங்கும் எடுத்துக்காட்டப்படும் முறையிலுள்ள சிறப்புக்களை எழுதுக.



07. அ) ஒரு பதிவிரதையின் சரிதத்தில் ஒருவன் செய்யும் தொழிலால் உயர்வு தாழ்வு பாராட்டுவது பொருத்தமானதா? எதனடிப்படையில் ஒருவனை மதிக்கவோ பாராட்டவோ வேண்டும் என்று கூறப்படுகிறது?

ஆ) யௌவன சந்நியாசி சந்தித்த இருவரும் யாவர்? அவர்களிடம் அவர் பெற்ற படிப்பினையை விளக்குக.


## இலக்கண வினா விடைகள்

01. "அந்தப் புத்தகம் என்னுடையது" இதில் 'அந்த' என்பது - சுட்டடை
02. "குருவியினது கூடு" இதில் வந்துள்ள வேற்றுமை தரும் பொருள் - உடமைப் பொருள்
03. "பிரசன்னா உழைப்பால் உயர்ந்தான்" இதில் வந்துள்ள வேற்றுமை தரும் பொருள் - காரணப் பெயர்
04. "அரிசி மாவால் செய்த பிட்டு" இதில் வந்துள்ள வேற்றுமை தரும் பொருள் - மூலப்பொருள்
05. "கண்ணன் பாட்டு பாரதியாரால் பாடப்பட்டது" இதில் வந்துள்ள வேற்றுமை தரும் பொருள் - கருத்தாப் பொருள்
06. "கத்தியால் மரத்தை வெட்டினான்" இதில் வந்துள்ள வேற்றுமை உருவுகள் - ஆல், ஐ
07. "தகுதிப் பொருள்" எவ்வேற்றுமைக்குரியது - 4ஆம் வேற்றுமை
08. ஒத்தல், ஒப்பு பொருள்கள் எவ்வேற்றுமைகளுக்குரியது? - இரண்டாம், ஐந்தாம் வேற்றுமைகள்
09. நின்று, இருந்து முதலான சொல்லுருபுகள் எவ்வேற்றுமைக்குரியது? - 5 ஆம் வேற்றுமை
10. ஆக, பொருட்டு, நிமித்தம் முதலான சொல்லுருபுகள் எவ்வேற்றுமைக்குரியது? - 4 ஆம் வேற்றுமை
11. "சூரியன் உதித்தான்" எத்தனையாம் வேற்றுமை? - முதலாம் வேற்றுமை
12. படித்த மனிதன் - பெயரெச்சம்
13. போனால் வரமாட்டாய் - வினையெச்சம்
14. பெயரெடையாக இடம்பெற்றுள்ள சொல் - ஒலி கடல்
15. "பாலும் தெளிதேனும் பாகும்" இத்தொடரில் வந்துள்ள 'உம்' இடைச்சொல் தரும் பொருள் - எண்ணல் பொருள்
16. வினைத் தொகையைக் குறித்து நிற்கும் சொல் - சுடுசோறு
17. தன்வினையாக வரக்கூடிய சொல் - உயர்ந்தவன்
18. "நான் சம்பளத்துக்கு வேலை செய்கிறேன்" இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு எப்பொருளில் வந்துள்ளது? - காரணப் பொருள்
19. "பத்தும் பேரும் வந்தனர்" இதில் உம் இடைச்சொல் எப்பொருளில் வந்துள்ளது? - முற்றுப்பொருள்
20. வினாச் சொல் ஒன்றைக் குறிப்பிடுக. - யாங்கு
21. "மரம் ஏறி விழுந்தவன் எழுந்து ஓடினான்" இத்தொடரில் வினையாலணையும் பெயர் - விழுந்தவன்
22. "வீட்டின் கதவை உடைத்தான்" இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகள் - இன், ஐ
23. "வானே நிலவே பிறவே" இதில் ஏகாரம் என்ன பொருளில் வந்துள்ளது? - எண்ணல் பொருள்
24. அசைகள் பிரதான எத்தனை வகைப்படும்? - 2 வகை
25. தேமாங்காய் என்பது? - நேர் நேர் நேர்
26. கருவிளங்காய் என்பது? - நிரை நிரை நேர்
27. செய்யுளுக்கு இசையாக அமைவதும் செய்யுளை ஒழுங்கு படுத்துவதும் எது? - சீர்
28. சீர்களின் மொத்த எண்ணிக்கை? - 07
29. சீரொடு சீரைச் சேர்த்துச் செய்யுளடிகளை அமைக்கும்போது அவற்றுக்கிடையில் உருவாகும் இயைபே..... எனப்படும் - தளை


# உலகின் இயற்கை அதிசயம்!

இயற்கையாக உருவான அதிசயங்கள் பற்றிய பட்டியலை சுவிற்சர்லாந்தில் உள்ள புதிய 7 அதிசயங்கள் அறக்கட்டளை வெளியிட்டு வருகிறது. அதன்படி உலக அளவில் 7 அதிசயங்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்பட்டது.

அந்தப் பட்டியலில் முதல் இடத்தை அமேசன் காடு பிடித்துள்ளது. இரண்டாவது இடத்தை வியட்நாம் ஹலொங் வளைகுடா, மூன்றாவது இடத்தை ஆஜென் டீனா இகுசு நீர்வீழ்ச்சி ஆகியவை பெற்றுள்ளன. இது தவிர, தென்கொரியாவின் ஜேஜு தீவு, இந்தோனேசியாவின் கொமாடோ, பிலிப்பைன்சின் தரைக்கு கீழ் ஓடும் புயர்டோ பிரின்சிசா ஆறு, தென் ஆபிரிக்காவின் டேபிள் மலை ஆகியவையும் அதிசய பட்டியலில் உள்ளன. உலக அதிசயங்கள் குறிதத அதிகாரப்பூர்வ இறுதிப் பட்டியல் அடுத்த ஆண்டு (2012) தொடக்கத்தில் வெளியாகிறது.



வியட்நாட் ஹலொங்குடா



# வருகிறது கம்ப்யூட்டர் படை!

மனநலம் பாதிக்கப் பட்ட சைக்கோக்களின் தாக்குதல் இப்படித்தான் இருக்கும் என்று கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. போகிற போக்கில் குடிநீர்த் தொட்டி யில் விஷத்தைக் கலப்பது, ரெயில் தண்டவாளங் களைத் தகர்ப்பது என்று எந்த எல்லைக்கும் அவர்கள் போவார்கள். வங்கியை முடக்குவது, இணையத்தளங்களை செயல் இழக்கச்செய்வது போன்ற காரியங்களை ஒரு வேலையாகவே செய்து வருகின்றனர் சிலர். தேடுதல் வலைத் தளமான கூகுள் தொடங்கி ட்விட்டர், பேஸ்புக் வரை அத்தனை ஜாம்ப வான்களுமே இப்படிப்பட்ட தாக்குதலை சந்தித்து இருக்கின்றன.

2009-ம் ஆண்டில் இப்படி நடந்த ஒரு தாக்குதலில் இருந்து கூகுள் ஒரு சில நிமிடங்களில் மீண்டு விட்டது. ஆனால், ட்விட்டரும் பேஸ்புக்கும் இதில் இருந்து மீள ஒரு சில மணி நேரங்கள் ஆனது.

இப்போது சைக்கோக்களின் கையில் இருக்கும் சைபர் அட்டாக் என்ற ஆயுதத்தை வருங்காலத் தில் ஒரு சில அரசாங்கங்களே கையில் எடுக்கும் ஆபத்தும் இருக்கிறது. கடல்படை, விமானப்படை, காலாட் படை போன்று கம்ப்யூட்டர் படையும் தனிப்படையாக சேர்க்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. உதாரணமாக சீனாவில் கூகுள் படும்பாடு, தணிக்கை என்ற பெயரில் அரசுக்கு எதிரான வார்த்தைகளைக் கூட வெளியிடக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்தது. மனித உரிமை ஆர்வலர்களின் இ-மெயிலை உளவு பார்த்தது.

ஒரு நாட்டின் அரசாக இருந்தாலும் தங்களின் வாடிக்கையாளர்கள் அனுப்பும் அல்லது பெறும் கடி தங்களை உளவு பார்ப்பதை சகித்துக் கொள்ள முடியாது என்று சொல்லி கூகுள் சீனாவில் இருந்து வெளியேறிவிட்டது.

ஆனால், சீனாவிலிருந்து வெளியேறி விட்டாலும், சீன அரசின் கட்டுப் பாடுகள் அவ்வளவாக இல்லாத ஹொங் கொங்கில் இருந்தபடி கூகுள் இப்போது செயற்படு கிறது. ஆனால் சீனாவுக்குள் இப்போது யாரும் கூகுளைப் பார்க்க முடியாதபடி சீன அரசு அதைத் தடுத்து விட்டது. வருங்காலத்தை ஆட்டிப்படைக் கப் போவது இந்த கம்ப்யூட்டர் படைதான்.

# விபச்சாரத்தில் கைதான தாயின் சோகக் கதை!

வன்னி இறுதி யுத்தம் தமிழ மக்களுக்கு பல துன்ப துயரங்களைப் பரிசளித்திருந்தாலும் அதனைச் சமாளித்தது, சகித்துக் கொண்டது தமிழினம். ஆனால் தற்போது யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றப்பட்டு வரும் கலா சாரப் பிறழ்வுகளும், சீரழிவுகளும் இந்த இறுதி யுத்தத்தினால்தான் அன்பளிப்புச் செய்யப்பட்டி ருக்கிறது. ஏனெனில் யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் முற்றுகைக்குட்பட்ட விபச்சார விடுதியில் கைது செய்யப்பட்டவர்களில் கணவனையிழந்த, மூன்று பிள்ளைகளின் தாயும் உள்ளடங்குகின்றார்.

யுத்தத்தின் வடுக்கள் வரலாறு காணாதவையாக இருந்தாலும் கூட, வம்சாவளி தொட்டுப் பின் தொடர்கின்றமையே வேதனைக்குரியவை. கணவன் இல்லாத நிலையில் மூன்று பிள்ளைகளுடன் தனது வாழ்வாதாரம் மற்றும் பிள்ளைகளின் கல்விச் செலவு போன்றவற்றை ஈடுசெய்வது இக் காலச் சூழ்நிலையில் இயலாத ஒன்று. அந்த வகையில் இத் தாயும் இந்தத் தொழிலுக்குத் தள்ளப்பட்டு, இப்போது கைதாகியிருப்பது தெரியவருகிறது.

புலம்பெயர் நாடுகளிலிருந்து மாவீரர் தினக் கொண்டாட்டங்களைப் போட்டி போட்டு நீயா, நானா என கொண்டாடும் உறவுகள் இந் நிலையில் இருக்கும் குடும்பங்களையும் ஓரளவு நினைத்துப் பார்க்க வேண்டும். மாவீரர் தினக் கொண்டாட்டங்களைக் கொண்டாடி தங்களது இருப்புக்களைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கும் இவர்கள், ஈழத்தில் எத்தனையோ குடும்பங்கள் இருளில் இருப்பதை உணர்வீர்களா?

இச் சம்பவத்திற்கு யார் மீது குற்றம் சொல்வது? இத் தாய் மீதா? அல்லது நம்பி வந்தவர்களைக் கைவிட்டவர்களையா? எது எப்படியாயினும் தமிழர் பகுதிகளில் அரங்கேற்றப்படும் கலாசாரச் சீரழிவுகள், திணிப்புக்கள் அனைத்தையும் நிறுத்த வேண்டும் என்பதையே நாங்கள் உங்களுக்கு அறியத் தருகின்றோம். இந்தக் கலாசாரச் சீரழிவில் ஒரு ஆணும் சம்மந்தப்பட்டவர்தானே. அவரும் பெண்ணளவிற்கு பிழை செய்கின்றவராக காணப்படும் போது பெண்ணை மட்டும் குற்றப்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

ஊடகங்களும் போட்டி போட்டுக்கொண்டு இத்தகைய செய்திகளைப் பிரமாண்டப்படுத்துவதில் காட்டும் ஆர்வத்தை, இந்த ஏழைப்பெண்களின் வாழ்க்கை அவலத்தை, இக்கதிக்கு ஆளாகியிருப்பதன் பின்னாலுள்ள சமூக அவலநிலைகளை அறிந்துகொள்வதில் காட்டுவதில்லை.

புலம்பெயர் நாடுகளிலிருந்து ஊடகங்களில் அறிக்கை விடுவதைவிடுத்து உங்களை நம்பிப் போராட்டம் நடத்தியவர்கள் தற்போது சின்னாபின்னமாகியுள்ளார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். வன்னியில் நடைபெற்ற கோர யுத்தத்தில் சிக்கியவர்களின் ஒவ்வொரு குடும்பங்களையும் நீங்கள் ஒவ்வொருத்தரும் பொறுப்பேற்றிருப்பீர்களாகயிருந்தால் இத் தாய் போல எத்தனையோ பேருக்கு இந்த அவல நிலை ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. எனவே இனியாவது குறுகிய மனப்பாங்கை விட்டு, வறட்டுக் கௌரவதைத் தூக்கி எறிந்து விட்டு நல்லதைச் செய்யுங்கள். அதுவே போதும்.

- நன்றி: சூத்திரம்



# புலிகளின் அதிகாரப் போராட்டம்

- டி.பி.எஸ்.ஜெயராஜ்

மே 2009 இல் முல்லைத்தீவில் நடந்த இராணுவத் தோல்வியில் எல்.ரீ.ரீ.ஈயின் பிரதான தலைவர் வேலுபபிள்ளை பிரபாகரனும் மற்றும் அதிக எண்ணிக்கையிலான சிரேஷ்ட தளபதிகளும் கொல்லப்பட்டனர். ஆயிரக் கணக்கான இதர எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களும் மற்றும் ஆதரவாளர்களும் ஆயுதப்படையினரிடம் சரணடைந்தார்கள். இதன் விளைவாக ஸ்ரீலங்காவில் உள்ள எல்.ரீ.ரீ.ஈயினரிடத்து உண்மையான அழிவு ஏற்பட்டது.

எப்படியாயினும் வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ கட்டமைப்பு மிகவும் உறுதியாகவே இருந்தது. எல்.ரீ.ரீ.ஈயின் முன்னாள் ஆயுதக் கொள்வனவுப் பகுதியின் தலைவரான செல்வராசா பத்மநாதன் எல்.ரீ.ரீ.ஈயின் சர்வதேச தொடர்புகளின் தலைவராக நியமிக்கப் பட்டது தலைமைப் பதவிக்கு கவசமிட்டது போலாயிற்று. தனது பணி மூப்பினை கணககில் கொண்டு வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ தலைவராக கே.பி மேற்கொண்ட முயற்சியை புலம்பெயர் சமூகத்திலுள்ள ஒரு பகுதி வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈயினர் கடுமையாக எதிர்த்தனர்.

முன்பு வெளிநாட்டிலிருந்த எல்.ரீ.ரீ.ஈயின் முன்னணி அமைப்புகளின் பல்வேறு கிளைகளையும் வன்னியைத் தளமாக கொண்டு இயங்கிவந்த வீரகத்தி மணிவண்ணன் என்ற கஸ்ட்ரோ தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். போர் வீரியமடைந்ததும் வன்னியிலுள்ள தலைமைச் செயலகத்துக்கும் வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ கட்டமைப்புக்கும் இடையேயான தொடர்பாடல்களை மேற்கொள்வது கடினமாகியது. இதனால் கஸ்ட்ரோ தனது பிரதிநிதியாக ஒஸ்லோவில் உள்ள நெடியவனை நியமித்தார். எல்.ரீ.ரீ.ஈயின் வெளிநாட்டு கட்டமைப்பு நெடியவனின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.



கே.பி ஒருகாலத்தில் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளுக்கு தலைவராக பணியாற்றியிருந்தார். எனவே பிரபாகரனின் மறைவுக்குப் பின்னர் கேபி எல்.ரீ.ரீ.ஈயின் தலைமைப் பதவியை கைப்பற்ற முயற்சித்தார். இதனை நெடியவனும் அவரது சகாக்களும் கடுமையாக எதிர்த்தார்கள், ஏனெனில் அவர்கள் வெளிநாட்டுக் கட்டமைப்பின் கட்டுப்பாட்டை கைவிட விரும்பவில்லை. முக்கியமாக வெளிநாட்டில் நிலை கொண்டிருந்த எல்.ரீ.ரீ.ஈயின் புலனாய்வுப் பிரிவின் சில செல்வாக்குள்ள புலித்தலைவர்களின் தீவிர முயற்சியன் பயனாக பலத்த சண்டை சச்சரவுகளின் பின்னர் ஒரு தற்காலிக சமாதானம் உருவாயிற்று.

புதிய ஒழுங்கின்படி கே.பி மீள்கட்டமைக்கப்பட்ட வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈயினரின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். ஸ்ரீலங்காவில் எல்.ரீ.ரீ.ஈ செயலற்றுப் போனதால், வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈயினர் தான் இப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் என்றழைக்கப் படலாயினர். புதிய தலைமை பல்வேறு திணைக்களங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் பொறுப்பான பல செயலாளர்களுக்கு தலைமையேற்றிருந்தது. தலைமைச் செயலகத்தின் தலைமைச் செயலாளராக கே.பி இருந்தார். கட்டமைப்பு எனப்படும் எல்.ரீ.ரீ.ஈயின் கிளை வலையமைப்புகளின் நிர்வாகத்தக்கு பொறுப்பான செயலராக நெடியவன் மாறினார்.

மீள் கட்டமைக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈக்குள் தனது தலைமைத்துவத்தை உறுதியாக நிலைநிறுத்திக் கொள்வதற்கு முன்பே, கே.பி மலேசியாவில் கைது செய்யப்பட்டு ஸ்ரீலங்காவுக்கு கொண்டு செல்லப்பட்டார். இது நெடியவனுக்கு அதிரஷ்டம் அடித்தது போலாயிற்று. கே.பி தனது வழியிலிருந்து அகன்றதும் எல்.ரீ.ரீ.ஈயின் வெளிநாட்டுக் கட்டமைப்புகளை தனது பிடிக்குள் மீண்டும் கொண்டுவருவது நெடியவனுக்கு எளிதாயிற்று. நெடியவன் கோஷ்டியினர் கே.பியை இப்போது துரோகி எனப்பழித்து பல்வேறு போலிக்குற்றச்சாட்டுகளை அவர்மீது சுமத்தி அவருக்கு குழி பறிக்க முயற்சிக்கிறார்கள்.

எப்படியாயினும் அங்கு சில தடங்கல்கள் உருவாயின. அவர்களிடையே தலைவரான வினாயகம் ஐரோப்பாவில் வெளிப்படலானார். வினாயகம் என்றழைக்கப்படும் சேகரம்பிள்ளை வினாயகமூர்த்தி எல்.ரீ.ரீ.ஈயின் புலனாய்வுப் பிரிவில் ஒரு மூத்த தலைவர். முல்லைத்தீவு வீழ்ச்சி இடம்பெற்றபோது அவர் வன்னியில் இருக்கவில்லை. அதன்பிறகு வினாயகம் ஸ்ரீலங்காவிலிருந்து தப்பி சிறிது காலத்தை தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் கழித்துவிட்டு பிரான்சுக்குச் சென்று அங்கு அரசியல் தஞ்சத்துக்கு விண்ணப்பித்துள்ளார். அவர் இப்போது பிரான்சுக்கும் அயல் நாடான ஜேர்மனிக்கும் இடையே ஓடித்திரிகிறார்.

கே.பிக்கும் நெடியவனுக்கும் இடையே தற்காலிகமான சமாதான ஒப்பந்தம் உருவாவதற்கும் மற்றும் எல்.ரீ.ரீ.ஈயின் வெளிநாட்டுக் கட்டமைப்புகளை மறுசீரமைப்பதற்கும் காரணமாக இருந்தவர்களில் வினாயகமும் ஒருவர். அவர் அப்போது கதிர்காமத்தம்பி அறிவழகன் என்றழைக்கப்படுபவரின் கீழ் இயங்கி வந்தார். வினாயகம் உலகம் முழுவதும் சிதறிக்கிடக்கும் எல்.ரீ.ரீ.ஈயின் புலனாய்வுப் பிரிவினருடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்து அவர்களை ஒருங்கிணைத்து ஒத்திசைவான குழுவொன்றை உருவாக்கியுள்ளார்.

ஆரம்பத்தில் வினாயகமும் மற்றும் நெடியவனும் ஒருமித்து பணியாற்றி வந்தார்கள் ஆனால் விரைவிலேயே இந்தக் கூட்டணி பிரிந்துவிட்டது. அதற்கான முக்கிய காரணம் நிதியமைப்புகள், வணிக அமைப்புகள், சொத்துக்கள் மற்றும் பணம் உருவாக்கும் நிறுவனங்கள் என்று அனைத்துமே நெடியவனின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருந்ததுதான், அதை வினாயகத்துடன் பங்கிடுவதற்கு நெடியவன் மறுத்துவிட்டார்.

(தொடரும்....)

# அவுஸ்ரேலியா இந்தியாவுக்கு யுரேனியம் வழங்கச் சம்மதம்

(சென்னை)

இந்தியாவுக்கு யுரேனியம் வழங்க முடியாது என்று முதலில் மறுத்து வந்தது அவுஸ்ரேலியா. ஆனால் தற்பொழுது இந்தியாவுக்கு யுரேனியம் வழங்குவோம் என்று கடந்த செவ்வாய்க் கிழமை அறிவித்துள்ளது. இந்தியாவுக்கு யுரேனியம் வழங்கும் அவுஸ்ரேலிய நாட்டின் முடிவுக்கு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஆதரவு தெரிவித்துள்ளார்.





அவுஸ்ரேலியாவுக்கு வந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இதுகுறித்து மெல்போர்னில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

அவுஸ்ரேலியாவின் இந்த அறிவிப்பு அணு ஆயுதப் பரவல் தடைச் சட்டத்தின் (என்பிடி) விதிமுறைகளுக்கு ஏற்றதாக உள்ளது.

அணு சக்தித் துறையில் இந்தியா மிகப் பெரிய நாடாக உள்ளது. அணு சக்தித் துறையில் இந்தியா, அவுஸ்ரேலிய நாடுகளின் நல்லுறவு அவசியம் என்றார்.

அமெரிக்கா கேட்டுக் கொண்டதன் பேரில் தான் இந்தியாவுக்கு யுரேனியம் வழங்க அவுஸ்ரேலியா ஒப்புக்கொண்டது என்ற கருத்தை அவுஸ்ரேலிய பத்திரிகை ஒன்றால் செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் இதை ஜனாதிபதி ஒபாமா மறுத்தார்.

# சிறையில் இருந்தும் மக்கள் பணி



(பீகார்)

முன்னாள் மத்திய அமைச்சர் ராஜா, திகார் சிறையில் உள்ள போதும், தொகுதி மக்கள் இருவருக்கு, பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து, இதய நோய் சிகிச்சைக்கு பணம் பெற்றுக் கொடுத்துள்ளார். "ஸ்பெக்ட்ரம்" ஊழலில் பிரதான குற்றவாளியாக கைது செய்யப்பட்டுள்ள ராஜா, பெப்ரவரி 2 ஆம் திகதியிலிருந்து, திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவருக்கு, நீலகிரி லோக்சபா தொகுதி மக்களின் கோரிக்கைகளைப் பெற்று, உதவியாளர் அனுப்பி வருகிறார்.

அப்படிப் பெறப்பட்ட கோரிக்கைகளில், கோத்தகிரியைச் சேர்ந்த ரவிசெல்வன் என்பவரது குழந்தை பரணிதரன், அன்னூரைச் சேர்ந்த நாகராஜ் ஆகியோர் இதயநோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவ உதவி கோருபவை. இக்கோரிக்கைகளை, பிரதமருக்கு பரிந்துரைத்து, பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து, தலா 50 ஆயிரம் இந்திய ரூபாயை, மருத்துவ சிகிச்சைக்கு ராஜா பெற்றுக் கொடுத்துள்ளார்.

# இந்திய - சீனா எல்லைகளில் போட்டிக்கு அபிவிருத்தி

(சென்னை)

இந்திய எல்லையில் சீனா உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருவதால் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவும் சீனாவுடனான எல்லையில் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துகிறது. மேலும் எல்லையில் 1 இலட்சம் வீரர்களை நிறுத்தவும் முடிவு செய்துள்ளது. இந்தியாவின் இந்த செயலுக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் சீனாவின் இந்த அறிவிப்பு குறித்து கருத்து தெரிவித்த டி.ஆர்.டி.ஓ தலைவர் சரஸ்வத், பாதுகாப்பு விடயத்தில் அண்டை நாடுகளை ஒப்பிட வேண்டியுள்ளது என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்தியா - சீனா எல்லையில் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருவதால் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் சீனா - இந்திய எல்லையில் 1 இலட்சம் படை வீரர்களை நிறுத்தும் இந்தியாவின் முடிவு இரு நாடுகளிடையே பதட்டத்தை ஏற்படுத்தும் செயல் என சீனா தெரிவித்துள்ளது.

# உயர்கல்வி நிலையங்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் நடைமுறைக்கு வருகின்றது

(புதுடில்லி)

மாணவர்களிடம் நன்கொடை பெறும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு இந்திய 1 கோடி ரூபா அபராதம் விதிக்கும் அதிரடி சட்டம் விரைவில் நடைமுறைக்கு வர உள்ளது. மேலும், தகுதி இல்லாத ஆசிரியர்களை நியமித்தால் கடும் நடவடிக்கை எடுப்பதற்கான புதிய விதிமுறையும் இந்த சட்ட மூலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

மாணவர்களிடம் நன்கொடை வசூலிக்கும் உயர் கல்வி நிலையங்களுக்கு இந்திய 1 கோடி ரூபா அபராதம் விதிக்கப்படும். மாணவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்காக தனி அமைப்பை உருவாக்கவும், கல்லூரி கையேடுகளில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் கல்லூரி நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்கும் பரிந்துரைக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், போதிய தகுதிகள் இல்லாத ஆசிரியர்களை நியமிக்க தடை விதிப்பதற்கான புதிய பிரிவும் இந்த சட்ட மூலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த சட்ட மூலத்தின் பெயரை 'உயர் கல்வி நிலையங்கள் சட்டம் ரூபா 2011' என்று அழைக்கப்படுகின்றது.

விவசாய கல்வி நிலையங்கள் மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அது இந்த சட்டத்தில் சேர்க்கப்படவில்லை. மருத்துவம், தொழில் நுட்பம் மற்றும் பல்கலைக் கழகங்களில் மாணவர்களிடம் நன்கொடை வசூலிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




# நில மோசடியில் நடிகர் ரித்தீஷ் கைது



(காஞ்சிபுரம்)

நில அபகரிப்பு புகாரில் தி.மு.க எம்.பி.யும் நடிகருமான ரித்தீஷ் கைது செய்யப்பட்டார். சேந்த மங்கலம் பாப்பாங்குழி கிராமத்தில் 1.47 ஏக்கர் நிலத்தை பிரபல நடிகரும் ராமநாதபுரம் தொகுதி திமுக எம்பியுமான ரித்தீஷ் என்ற சிவக்குமார் (39) என்பவர், போலி ஆவணம் தயாரித்து, புதுடில்லியில் உள்ள 'ஹச்சர் ரிலேட்டர்ஸ்' என்ற தனியார் நிறுவனத்துக்கு விற்பனை செய்துள்ளார்.

இந்த நிலத்தை மீட்டுதர நடவடிக்கை எடுக்க வேண்டும் என நில புரோக்கர் சாமிக்கண்ணு என்பவர் காஞ்சிபுரம் மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவு பொலிஸில் அளித்த புகாரின் அடிப்படையில் மேற்படி கைது இடம் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணிக்கு சென்னை மயிலாப்பூரில் உள்ள வீட்டில் நித்திரையில் இருந்த ரித்தீஷை எழுப்பி கைது செய்தனர். ரித்தீஷ் மீது இந்திய தண்டனை சட்டப் பிரிவு 465, 467, 468, 471, 420 மற்றும் 109 ஆகிய பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து ஸ்ரீபெரும்புதூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். நீதிபதி சையத் அப்துல் மாலிக், அவரை 15 நாள் காவலில் வைக்க உத்தர விட்டார். இதையடுத்து, அவர் வேலூர் சிறையில் அடைக்கப் பட்டார்.

ரித்தீஷின் உதவியாளர் போஸ் கூறுகையில், மக்கள் நல பணியாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டதை கண்டித்து ராமநாதபுரத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ரித்தீ எம்.பி. கலந்து கொண்டார். அங்கிருந்து இரவு தான் மயிலாப்பூர் வீட்டுக்கு வந்தார். அதிகாலை 5 மணிக்கு பொலிஸார் வந்து, அவரை கைது செய்தனர் என்றார்.

# அக்கினி - 5 விரைவில்



(புதுடில்லி)

அணு ஆயுதங்களை சுமந்து கொண்டு 5,000 கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கும் அக்னி 5 ஏவுகணை 2012 பெப்ரவரி மாதம் சோதனை செய்யப்படும் என்று இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் சரஸ்வத் கூறியுள்ளார். அக்னி என்ற பெயரில் ஏவுகணைகளை இந்தியா தயாரித்து வருகிறது. அக்னி 1, அக்னி 2 மற்றும் 3 ரக ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டு வெற்றிகரமாக சோதிக்கப்பட்டு ராணுவத்தில் சேர்க்கப்பட்டன.


3,000 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள எதிரியின் இலக்கை குறி தவறாமல் தாக்கும் திறன் கொண்ட அக்னி 4 ஏவுகணை கடந்த செவ்வாய்க்கிழமை ஒடிசா மாநிலத்தில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்சித் தொண்டர்கள் மத்தியில் ஞானதேசிகன் ஆவேசப் பேச்சு

(சென்னை)

தமிழக காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவர் ஞானதேசிகன் முன்னணி தலைவர்கள் முன்னிலையில் அவர் பேசும் போது, "காங்கிரஸ் கட்சி ஒன்றும் சுருட்டி வைக்க கோரைப்பாயும் அல்ல கிள்ளி எறிய கிள்ளுக்கீரையும் அல்ல" என்று ஆவேசமாக கூறினார்.

சத்தியமூர்த்தி பவனில், கட்சியின், "மினிட்" புத்தகத்தில் ஞானதேசிகன் கையெழுத்திட்டு பதவி ஏற்ற பின்னர், தொண்டர்கள் மத்தியில் ஞானதேசிகன் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.




மேலும் அவர் தலைவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, வலிமையான கட்சியாக மாற்ற வேண்டும் என்று எனக்கு சோனியா, ராகுல் கட்டளையிட்டுள்ளனர்.

அவர்களின் கட்டளையை நிறைவேற்றுவேன். அனைத்து தலைவர்களும், தொடர்ந்து ஒத்துழைப்பு தரும் அளவுக்கு நான் நடந்து கொள்வேன். காமராஜர் ஆட்சி அமைய பாடுபடுவேன். உள்ளாட்சி தேர்தல் ஓட்டு சதவீதத்தை வைத்து, காங்கிரஸ் கட்சியை மற்ற கட்சிகள் கணக்கு போடக்கூடாது. தனிமாக தோற்பாகாது. அனைத்து தலைவர்களின் ஒருமித்த கருத்துடன் செயற்பட்டால் தான் கட்சியை வளர்க்க முடியும். காங்கிரஸ் கோரைப்பாய் அல்ல, சுருட்டி வைக்க கிள்ளி எறிய கிள்ளுக் கீரையும் அல்ல என்பதை நிரூபிப்பேன்.

ஒன்றுபடுவோம், செயற்படுவோம், வெற்றி பெறுவோம் என்ற கோஷத்தை முன்வைக்கிறேன். இவ்வாறு ஞானதேசிகன் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

# எண்ணெய் உற்பத்தியை தொடங்கியது லிபியா



லிபியாவின் பிரதான எண்ணெய் உற்பத்தி மையம ஸ்வியா, இயங்கத் தொடங்கி விட்டது. யுத்தத்தின் இறுதி நாட்களில் நாட்டின் அனைத்து எண்ணை உற்பத்தி மையங்களும் உற்பத்தியை நிறுத்தியிருந்தன. யுத்தத்தின்போது ராக்கெட் ஷெல் தாக்குதல்கள் சில எண்ணெய் மையங்களை ஓரளவுக்கு சேதப்படுத்தி இருந்தன. கிட்டத்தட்ட 6 மாதங்கள் எண்ணெய உற்பத்தியே நின்று போனது.

எண்ணை பேரல்களில் துப்பாக்கி சூட்டினால் ஏற்படுத்தப்பட்ட துவாரங்கள் அடைக்கப்பட்டு விட்டன. குண்டுத் தாக்குதல்களில் சேதமடைந்த ஜெனரேட்டர்கள் பழுது பார்க்கப்பட்டு விட்டன. இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக, எண்ணெய் பாய்ந்து செல்லும் பைப் லைன்கள் மீண்டும் திறக்கப்பட்டு விட்டன. இந்த பைப் லைன்கள் ஊடாகத்தான் லிபியாவின் எண்ணெய்வளம் சுத்திகரிக்கப்பட்டு, துறைமுகம் வரை சென்று வெளிநாடுகளுக்குப் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்த யுத்தத்தில் இருதரப்பும் ஒருவரை ஒருவர் கொன்று குவித்தாலும், ஆச்சரியகரமாக முடிந்தவரை எண்ணெய் தயாரிப்பு மையங்களை சேதப்படுத்த வில்லை.

கடாபி படைகளுக்கு எதிராக யுத்தம் புரிந்த போராளிப் படையினர் யுத்தத்தை தொடங்கிய காரணங்களில் ஒன்று, தமது எண்ணெய் வளம் வெளிநாட்டவர்களுக்கு விற்கப்படுகின்றது. இதனால், அவர்கள் தமது தாக்குதல்களால் எண்ணெய் . மையங்கள் சேதமடையாமல் பார்த்துக் கொண்டார்கள்.

தற்போது லிபியாவின் எண்ணெய் மையங்கள் தமது உற்பத்தி இலக்கில் 40வீத உற்பத்தியை செய்கின்றன. அடுத்த வருடம் நடுப்பகுதியில், வழமையான உற்பத்தி அளவு எட்டப்பட்டு விடும் என்பதில் அனைவரும் உறுதியாக உள்ளனர். வழமையான எண்ணெய் உற்பத்தி அளவு, தினத்துக்கு 1.6 மில்லியன் பேரல்கள்!

லிபிய அரசின் வருமானத்தில் 80 சதவீதமும், ஏற்றுமதி வருமானத்தில் 95 சதவீதமும் கிடைப்பது எண்ணெய் மூலம் என்பது குறிப்பிடத்தக்கது. எந்தவொரு நாடும் யுத்தத்தின்பின், மிக மோசமாக பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படும். அதிலிருந்து மீண்டு எழுவதற்கே பல வருடங்கள் பிடிக்கும். அதுவரை பல நாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படும். இது ஒரு பொதுவான விதி. லிபியாவின் நிலைமை ஒரு விதிவிலக்கு!

# சீனாவில் வீதி விபத்து 18 குழந்தைகள் பலி

(பீஜிங்)

சீனாவின் வடமேற்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த வீதி விபத்தில், 18 குழந்தைகள் உட்பட 19 பேர் பலியாயினர். இச்சம்பவம், சீன மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சீனாவில் குறைந்த இருக்கைகள் கொண்ட பாடசாலை வாகனங்களில், அதிக எண்ணிக்கையில் மழலைப் பள்ளிக் குழந்தைகளை, மாணவர்களை ஏற்றிச் செல்வது வாடிக்கை. இதனால், அங்கு பாடசாலை வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றன.

யூலின்சி பகுதியில், எதிரில் வந்து கொண்டிருந்த நிலக்கரி லொறியுடன், பாடசாலை வாகனம் நேருக்கு நேராக மோதியது. இதில், வாகனம் பாரிய சேதத்திற்கு உள்ளானது. சம்பவ இடத்திலேயே நான்கு குழந்தைகளும், வாகன ஓட்டுனரும் பலியாயினர். மீதி 14 பேர், மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலும், மருத்துவமனையிலும் பலியாயினர்.45 குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர். இவர்களில் 13 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இச்சம்பவம், சில மணி நேரங்களிலேயே சீனா முழுவதும்' 'ட்விட்டர்" மற்றும் "பேஸ்புக்" சமூக வலைத்தளங்கள் மூலம் செய்தி பரவியது.



# தலைவர்கள் முத்தமிடும் சர்ச்சையை கிளப்பும் விளம்பரம்




இத்தாலியை சேர்ந்த 'பெனட்டான்' என்ற நிறுவனம் உலக மக்களை கவருவதற்காக வித்தியாசமாக யோசித்து 6 வகையான விளம்பரங்களை தயாரித்தது. 'அன்ஹேட்' (வெறுப்பில்லை) என்ற தலைப்பில் பிரபலமான உலக தலைவகள் 6 பேரின போட்டோக்கள் இந்த விளம்பரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஆட்சேபகரமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அந்த விளம்பரம் பெருத்த சர்ச்சையை கிளப்பி இருக்கிறது.

ஒரு விளம்பரத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், சீன ஜனாதிபதி ஹஜிண்டாவோவும் உதட்டோடு உதடு சேர்த்து முத்தம் கொடுத்துக் கொள்வது போன்று உள்ளது. இதுகூடப் பரவாயில்லை. மற்றொரு விளம்பரம்தான் பலரின் கோபத்தை கிளறி விட்டுள்ளது. போப் 16ஆம் பெனடிக், எகிப்து நாட்டைச் சேர்ந்த இமாம் அகமது எல் தய்யேப் இருவரும் வாயுடன் வாய் வைத்து முத்தமிட்டுக் கொண்டு இருப்பது போன்று மற்றொரு விளம்பரத்தில் உள்ளது.

அதேபோல இஸ்ரேல் பிரதம மந்திரி பெஞ்சமின் நெடன்யாகு, பாலஸ்தீன தலைவர் முகம்மது அப்பாஸ் ஆகியோர் முத்தமிட்டப்படி இருப்பது போன்று மற்றொரு விளம்பரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த உலக பிரபலங்கள் ஆறு பேரை வைத்து 6 விதமான விளம்பரங்களை தயாரித்து, பெனட்டான் நிறுவனம் முக்கிய இடங்களில் வைத்துள்ளது. உலகம் முழுவதும் இந்த விளம்பரத்தை கொண்டு செல்ல அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த விளம்பரங்கள் பலத்த சர்ச்சையையும், பெருத்த கண்டனங்களையும் சம்பாதித்துள்ளது. குறிப்பாக முஸ்லிம் நாடுகளும், தலைவர்களும் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்துள்ளனர். இந்த விளம்பரங்களை உடனடியாக அகற்ற வேண்டும், மேற்கொண்டு வேறு எங்கும் இந்த விளம்பரத்தை பயன்படுத்தக் கூடாது என்று எச்சரித்துள்ளனர். விளம்பரங்களில் இந்த உலக தலைவர்களின் படங்களை பயன்படுத்திக் கொள்ள சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து பெனட்டான் நிறுவனம் அனுமதி பெறவில்லை என்று தெரியவந்துள்ளது.

# இந்தோனேஷியாவில் மீண்டும் நிலநடுக்கம்

(ஜகர்த்தா)

இந்தோனேஷியாவில் பப்புவா மாகாணத்தில் நேற்று காலை 8.42 மணி அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் பப்புவா மாகாண தலைநகர் ஜெயபுராவில் உள்ள ஆக்சிபில் என்ற இடத்தில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி, வீதிகளில் பீதியுடன் தஞ்சம் அடைந்தனர்.

அங்கு 6.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக இந்தோனேஷியா வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. மேலும் மலைநகரமான ஆக்ஷிபில்லை மையமாக கொண்டு பூமிக்கு அடியில் 53 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் உருவானதாகவும் கூறப்பட்டுள்ளது. நிலநடுக்கம் காரணமாக கடலில் வழக்கத்துக்கு மாறாக உயரமான அலைகள் எழும்பின. எனவே சுனாமி ஏற்படும் என்ற அச்சத்தில் மக்கள் உறைந்து இருந்தனர். ஆனால் சுனாமி அபாய எச்சரிக்கை விடப்படவில்லை.

# பதிவிறக்கப் பெட்டகம்

கோபப்படக் கூடாது என்று நான் உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறேன். இயன்றவரை கோபத்தை அடக்க முயற்சியும் செய்து கொண்டிருக்கிறேன். ஆனால்கோபம் அதிகமாக ஏன் வரவில்லை என எண்ணும் தருணங்கள் இரண்டு. ஒன்று, தொலைக் காட்சியில் நீளத் திரிந்து உழலும் தமிழ்த் தொடர்களைக் காண நேரும போது. கடவுள் நினைத்தாலொழிய முடிக்க மாட்டோம் என்னும் பிடிவாதத்தோடு கலாசாரப் பாழ்வெளிகளைத் தொடர்ந்து உருவாகக்கிக்கொண்டு செல்லும் இந்தத் தொடர்கள் என்னுடைய ரத்த அழுத்தத்தை அபாய அலகுகளுக்கு அப்பால் கொண்டுசெல்லத் தவறுவதில்லை.

இரண்டாம் தருணம், பழந்தமிழ் இலக்கியத்தில் அறிவியற் கூற்றுகள் ஆங்காங்கே பதிக்கப்பட்டிருக்கின்றன எனத் தமிழ் 'அறிஞர்கள்' பேசுவதைக் கேட்கும்போது. 'கிழிந்தது ககன முட்டை கீழும் மேலும்' என்ற கம்பனின் கூற்று ஹாம்பிளின் பிரபஞ்ச விரிவாக்கக் [expanding universe] கொள்கையை அன்றே கம்பன் சொனனதைக் குறிக்கும் என்று ஒருவர் கூறியதை ஒரு தமிழ் இதழில் சமீபத்தில் படித்தேன். ஹாம்பிள் என்பவர் யாரென்று எனக்குத் தெரியவில்லை. ஹாயிலாக இருக்கலாம். ஆனால் பிரபஞ்சம் எவ்வாறு பிறந்தது என்பது பற்றிய ஆராய்ச்சியில் தங்கள் வாழ்நாளைச் செலவிட்ட, செலவிட்டுக்கொண்டுள்ள அறிஞர்களின் உழைப்பை எள்ளல் செய்யும் கூற்று இது. கம்பனையும் எள்ளல் செய்வது.

– பி. ஏ. கிருஷ்ணன்

நம்முடைய சமுதாயம் என்றைக்கு நீதியாக வாழ்ந்ததென்று சொல்கிறீர்கள்? அசோகனின் அப்பன் பிந்துசாரன் இருந்தான் பாருங்கள் அவனும் புத்தனும் நண்பர்க்ள். அப்படி இருந்தும் அசோகன் தொடர்ந்து கொலை செய்து கொண்டே வருகிறானே? எங்கே நீதியாக இருந்தது நம் சமூகம்? நாடு முழுவதும் எப்போது பார்த்தாலும் போராட்டம்?. "இவன்" அவனை வெட்டுவது. "அவன்" இவனை வெட்டுவது. அந்தக் காலத்திலிருந்து இன்று வரைக்கும் அதைத்தானே செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, நீதி என்ற ஒன்று வரவேண்டுமென்றால், அது இனிமேல்தான் வர வேண்டும். இராஜராஜசோழன் காலத்தில் தண்டனை இது :

மழை பெய்யவில்லை. பூமி விளையவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன செய்வார்களென்றால் குடிசையில் இருகின்ற வெண்கலப் பாத்திரங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு குடிசைக்குத் தீயை வைத்துவிட்டு அவனுக்கு சிவ துரோகி என்று பட்டம் கட்டி நாடு கடத்திவிடுவார்கள். இது தஞ்சைப் பெரிய கோயிலின் கல்வெட்டில் எழுதி இருக்கிறது. நிலத்தையெல்லாம் சிவனின் சொத்தாக எழுதி வைத்துவிட்டார்கள். குத்தகை கொடுக்கவில்லை என்றால் சிவனுக்குத் துரோகம் செய்துவிட்டதாக அர்த்தம். சிவனுக்குத் துரோகம் செய்தவனுக்கு தண்டனை என்னவென்றால், "மண் கலம் உடைத்து பொன் கலம் எடுத்து குடிசைக்கு தீ வைத்து சிவதுரோகி பட்டம் சூட்டி நாடு கடத்துதல்" இதுதான் தண்டனை. அப்போ என்றைக்கு நீதி இருந்திருக்கிறது?

– நம்மாழ்வார்

ஆண் பெண் உறவில் கணவன் மனைவி உறவென்பது, சுதந்திரம் என்பது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. மனைவியை ஒரு முழம் மல்லிகைப் பூவிலும் ஒரு பட்டுப் புடவையிலும் சந்தோஷப்படுத்தி விடலாம் என்ற அபத்தமான நம்பிக்கையில் கணவன் இயங்குகிறான். உண்மை அப்படி அல்ல. ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ளுதல். இது சகமனிதனைப் புரிந்து கொள்ளுதலின் தொடக்கம். சகமனிதனை சகித்துக்கொள்ள முயல வேண்டும். சகமனி தனைப் புரிந்துகொள்ள முயலவேண்டும். முடியுமானால் நான் சகமனிதன்மீது அன்பு செய்ய முயல வேண்டும்.

உலகம் அயோக்கிய மயமாக இருக்கட்டும். நான் அதற்குத் தயாரில்லை. உலகம் வன்முறைகளில் ஈடுபட்டுத் துன்புறட்டும். நான் அதற்குத் தயாரில்லை. உலகம் கிட்னி திருடி, சாராயம் விற்று, கலப்படம் செய்து, மோசடி செய்து, விபசாரம் செய்து பணம் ஈட்டட்டும். நான் அதறகுத் தயாரில்லை.

ஏனெனில் என் போன்ற சிறுபான்மையினர், நம் போன்ற சிறுபான்மையினர் தாம் உலகத்தின் சமன் நிலையைக் காப்பாற்றி வருபவர்கள். நமக்கு வாய்த்திருக்கும் நல்ல தன்மைகளை அற்ப சுகங்களுக்காக இழக்க நாம் தயாராக இல்லை.

– நாஞ்சில் நாடன்

அடுத்து வருபவன் ஆனா, அலியா, கிழவனா, வாலிபனா, அழகனா, குரூபியா, முரடனா, சாதுவானவனா என்றெல்லாம் கவலைப்படாது அவனிடத்துத் தன்னைத் தானே ஒப்படைத்துக் கொள்கிறாளே அந்தச் சிறுமியிடத்து யாரும் ஒரு தெய்வீக உணர்வைச் சந்திக்காமல் இருக்க முடியாது. சமுதாயம் அவ்வப்போது கற்பிக்கும் போலி ஏற்றத்தாழ்வு உணர்ச்சிகளுக்கு இரையாகாமல் இருப்பவன் ஒருவனே இதைப் புரிந்துகொள்ள முடியும். எது எப்படி இருப்பினும் 'தேவடியாள்' என்பதை ஒரு வசைச் சொல்லாகப் பயன்படுத்த நியாயமே இல்லை. வேண்டுமென்றால் தி. ஜானகிராமனது 'கோவில் விளக்கு' என்ற சிறுகதையையோ அல்லது ஈஜின் ஓனீலின் 'அன்னா கிறிஸ்டி' நாடகத்தையாவது படித்துப் பாருங்கள்....

பரத்தை மாதவியின் நல்லியல்புகள்தானே மணிமேகலையிடத்துக் குடிகொண்டன.

– ஜி. நாகராஜன்





மாண்புமிகு அமைச்சர்
டக்ளஸ் தேவானந்தா
அவர்கள்



மாண்புமிகு பிரதி அமைச்சர்
வீரகுமார திசாநாயக்க
அவர்கள்



அமைச்சின் செயலாளர்
திரு.வே.சிவஞானசோதி
அவர்கள்

# அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பதவியேற்று வெற்றிகரமாக ஆறாம் ஆண்டை பூர்த்தி செய்தமையையிட்டு எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

மஹிந்த சிந்தனை தொலைநோக்கிற்கு அமைவாக ஆண்டு தோறும் 5000 சிறுகைத்தொழில்களை நடுத்தர மட்டத்திற்கு உயர்த்துவதையும் 200 நடுத்தரமட்ட கைத்தொழில்களை பாரிய கைத்தொழில் மட்டத்திற்கு உயர்த்துவதையும்,"வாழ்வு எழுச்சி"(திவி நெகும) வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 81,000 மனைக்கைத்தொழில் பொருளாதார அலகுகள் நிறுவப்படுவதையும் இலக்காக கொண்ட செயற்பாட்டை அடைவதற்கு எமது பூரண பங்களிப்பை வழங்குவோம்.

## தேசத்தை மீட்டுத்தந்த தலைவருக்கு எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகுக

இலங்கை
ஆசியாவின் மலர்ந்து வரும் ஆச்சரியம்

සාම්ප්‍රදායික කර්මාන්ත හා කුඩා ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍යාංශය
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT

(C/1091)

# சமுர்த்தி திட்ட பயனாளிகளுக்கு காசோலை வழங்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி வீட்டுத்திட்டத்தின் கீழ் சீட்டிழுப்பில் தெரிவுசெய்யப்பட்ட 61 சமுர்த்தி பயனாளிகளுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலை வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சமுர்த்தி ஆணையாளர் சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா சமுர்த்திப் பயனாளிகளுக்கான காசோலையினை வழங்கி வைத்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சமுர்த்தி ஆணையாளர் சிவஸ்ரீ, பிரதேச செயலர்கள் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் 6 வருட நிறைவையொட்டியே சமுர்த்தி பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டத்திற்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது. (எஸ்)

## பிற்போடப்பட்டது

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த நடமாடும் சேவை தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும், நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (104)

# மக்கள் பங்கேற்புடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையால் நடத்தப்படும் ஜே/79 கிராம அலுவலர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு ஜே/79 சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

## கூட்டமைப்புடனான...

காலத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது குறித்து கட்சித் தலைவர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

## ஐ.நா.செயலரின்...

இவ்வாறு கூறினார்.

புலிகளின் சர்வதேச வலைப்பின்னலின் இலங்கைக்கு எதிரான பிரசாரங்களை முறியடிக்கவும் மேற்கு நாடுகளில் புலிகளின் பிரசாரங்களால் மங்கச்செய்யப்பட்ட இலங்கையின் மதிப்பை மீள நிலைநாட்டவும் அந்நாடுகளுடன் நல்லுறவை நிலைநாட்டவும் தொண்டு நிறுவன ஆலோசனைப் பிரிவொன்றையும் புலம்பெயர்ந்தோர் பிரிவொன்றையும் ஸ்தாபிப்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

புலிகளினால் சர்வதேச ரீதியாக பரப்பப்படும் பொய்யான 'தகவல்களையும் பிரசாரங்களையும் வெளிவிவகார அமைச்சினால் மாத்திரம் முறியடிக்க முடியாது. இது நாம் செய்த பெரியதொரு தவறு. இப்பிரசாரங்கள் எப்போதும் உண்மையானவை அல்ல. ஆனால் நாம் அவற்றை முறியடிக்க வேண்டும்.

புலிகளின் மூன்று முக்கிய ஈர்ப்பு மையங்கள் இருந்தன. முதலாவது பிரபாரகன். அடுத்தது பிரசாரம் மேற்கொள்வதற்கான ஆற்றல், நிதி திரட்டுவதற்கு, ஆயுதம் வாங்குவதற்கான ஆற்றல் மற்றும் விருத்தியடைந்த கப்பல் வலையமைப்பு ஆகியவற்றைக் கொண்ட சர்வதேச வலையமைப்பாகும். மூன்றாவது, போரிடுவதில் அவர்களின் விசேட ஆற்றலாகும்.

நெடியவன், வண. பிதா இமானுவேல், ருத்திரகுமாரன் போன்றோர் பொய்யான தகவல்களை தமது அமைப்புகள் மற்றும் பிரசார வலையமைப்புகளுக்கூடாக பரப்புவதில் முன்னிற்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமாதானத்தை பாதுகாத்தல், நல்லிணக்கத்தை நோக்கி நகர்தல் மூலம் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும்.

புலிகள் பெரும் எண்ணிக்கையான அரசியல் தலைவர்கள், மற்றும் இராணுவத் தளபதிகளைக் கொன்றதாகவும் அக்கொலைகளை வேறெந்த பயங்கரவாத அமைப்பும் செய்பவற்றுடன் ஒப்பிட முடியாது எனவும் அவர் மேலும் கூறினார்.

# வேறு எந்த தொழில் முயற்சியையும் அரசாங்கம் பொறுப்பேற்க மாட்டாது

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடு குறைந்த தொழில் முயற்சிகள் மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்களுக்கு புத்துயிரளிக்கும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் முயற்சிகளைத் தவிர்ந்த வேறு எந்தவொரு தொழில் முயற்சியையும் பொறுப்பேற்பதற்கான நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது என ஜனாதிபதி செயலகம் தெரிவித்திள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ் வேறு தொழில் முயற்சிகளையும் சொத்துக்களையும் கையேற்பதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக வெளியாகும் செய்திகள் போலியான, ஆதாரமற்ற செய்திகள் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் அரசியலமைப்பிற்கு ஏற்புடையதா என்பது குறித்த சட்டம் நாடாளுமன்றத்தில் மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பொறுப்பேற்கப்படவுள்ள சொத்துக்களின் பட்டியல் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தொழில் முயற்சிகளுக்கு மாத்திரம் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மட்டுப்படுத்தப்படும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்கள் மத்தியில் அநாவசியமான அச்சத்தை தோற்றுவிக்கும் அரசியல் நோக்கத்துடன் மேலும் பல தொழில் முயற்சிகளை பொறுப்பேற்க அரசாங்கம் தயாராவதாக போலியான ஊடகத் தகவல்கள் வெளியிடப்படுவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதேச...

இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். அரசாங்கத்தின் பொதுவான இடமாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் பிரதேச செயலர்களுக்கு ஆறு வருடங்களுக்கு ஒரு முறை இடமாற்றங்கள் வழங்கப்படும்.

ஆனால் யுத்தம் காரணமாக வடக்கிலும் தெற்கிலும் இவ்வாறான இடமாற்றக் கொள்கைகள் 30 வருடங்களாக கடைப்பிடிக்கப்படவில்லை. தற்போது இதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சமாதான...

அனுசரணையுடனான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைய மக்கள் விடுதலை முன்னணியே பாரிய பங்காற்றியது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகளின் தோல்வி தொடர்பில் நோர்வே அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ஆனால் அந்த அறிக்கையை நாங்கள் இன்னும் ஆராயவில்லை. ஆராய்ந்து முடிந்ததும் அது தொடர்பில் கருத்து வெளியிடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## துமிந்த வெளிநாடு...

அறிவிப்பதற்காக நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள சட்டத்தின் பிரகாரமே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கும் நிறுவனம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர், சந்தேக நபர் ஒருவர் வெளிநாட்டில் இருந்தால் அவரை நாட்டிற்கு வரவழைப்பதற்கான நடைமுறையொன்று உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

## வெள்ளைக்கொடி....

உள்ளிட்ட பல தரப்பினரிடம் நீதிமன்றில் சாட்சியங்கள் பெறப்பட்டன. இந்நிலையில் விசாரணைகள் யாவும் நிறைவடைந்து, இன்றைய தினம் வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பிலான வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினம் என்பது குறிப்படத்தக்கது.

இதேவேளை, வெள்ளைக் கொடி வழக்கு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளதால் கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில் சட்டவிரோத எதிர்ப்பு கூட்டம் நடத்துபவர்களை விரட்டியடிக்க பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வாழைத்தோட்டப் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட அறிக்கை ஒன்றை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் இவ் அறிவித்தலை விடுத்துள்ளது.

வெள்ளைக் கொடி வழக்கு தீர்ப்பு இன்று வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் சமாதானத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட சிலர் தீர்மானித்துள்ளதாக புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் தகவல் வழங்கியுள்ளதாக வாழைத்தோட்ட பொலிஸார் நீதிமன்றில் கூறியுள்ளனர்.

## இரண்டாவது சிறுவர்...

ரவூப் ஹக்கீம் உட்பட்ட குழுவினர் பருத்தித்துறை நகரப் பகுதியிலிருந்து மங்கள வாத்தியம் மற்றும் பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்பு, வரவேற்பு நடனம் ஆகியவற்றுடன் நிகழ்வு நடைபெற்ற இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதை, தேசியக் கொடியேற்றலை அடுத்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் திரைநீக்கம் செய்ய நீதிமன்ற கட்டடத்தை பிரதம நீதியரசர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் நீதி அமைச்சின் செயலாளர் சுகத் கம்லத், உயர் நீதிமன்ற நீதிபதி பத்மராஜா, பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரம், யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திருமதி சாந்தா அபிமன்னசிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை இலங்கையின் இரண்டாவது சிறுவர் நீதவான் நீதிமன்றம் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினால் யாழ். குருநகர் பகுதியில் நேற்றுப் பிற்பகல் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமின் அழைப்பின் பேரில் யாழ். வந்திருந்த அவர் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் குருநகர் பகுதியில் யுனிசெப் நிறுவனத்தின் 3.5 மில்லியன் ரூபா நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட நீதிமன்ற கட்டடத்தை நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

முன்னதாக இந்நிகழ்விற்கு வருகை தந்திருந்த பிரதம நீதியரசருக்கு பொலிஸார் அணிவகுப்பு மரியாதையுடன் செங்கம்பள வரவேற்பும் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதம நீதியரசர், வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நீதி அமைச்சின் செயலாளர் சுகத் கம்லத், யுனிசெப் நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி ஆகியோருக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சிறப்பான வரவேற்பும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வையடுத்து பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க சிறுவர் நீதிமன்றத்திற்கான பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்ததுடன், நீதிமன்ற கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

இலங்கையின் முதலாவது சிறுவர் நீதிமன்றம் கொழும்பு வத்தளையில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், 3, 4 ஆம் சிறுவர் நீதிமன்றங்கள் முறையே மட்டக்களப்பு, நீர்கொழும்பு பகுதிகளில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் நீதியமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். மாவட்ட நீதவான் அன்னலிங்கம் பிரேம்சங்கர், நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா, யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திருமதி சாந்தா அபிமன்னசிங்கம், நீதவான் கணேசராசா, நீதிமன்ற பதிவாளர்கள், நீதிமன்ற பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (பா,116)

## மக்களின் நலனைக்...

செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பட்டறை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், துறைசார்ந்தவர்கள் மக்களுக்கு சிறப்பான முறையில் பணியாற்ற வேண்டும் என்பதற்காகவே இவ்வாறான பயிற்சிப் பட்டறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் தான் அரசினாலும் மக்களவை சபையினாலும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கான இந்தப் பயிற்சிப் பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டது. இவ்வாறான வாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்தும் போதுதான் மக்களுக்கான சேவைகள் பயனுள்ளதாக அமையும். மக்களது பிரச்சினைகள் முன்னுரிமை அடிப்படையில் இனங்கண்டு அவற்றை சரியான வாய்ப்புகளினூடாக தீர்க்க வேண்டும்.

அத்துடன் இன்றைய அமைதிச் சூழலை ஏற்படுத்தி தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்ட அமைச்சர், அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இம் மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளும் சேவையாற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி உரையாற்றும் போது, மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச சபைகளும் மக்கள் நலன்களில் அக்கறையுடன் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரணவன் உள்ளிட்ட பிரதேச சபைத் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# கடற்புலிகளின் ஆயுதக் கப்பல் வழிமறிப்பு இந்தியக் கடற்படையினரும் இருந்தனர்

## என்கிறார் மாலைதீவு பாதுகாப்பு அதிகாரி

(கொழும்பு)

கடற்புலிகள் ஆயுதங்களை ஏற்றிவந்த 'சிறிகிருஸ்ணா' என்ற இழுவைப்படகு, மாலைதீவு கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டபோது, அதனை இடைமறித்த மாலைதீவு கடலோரக் காவல்படைக் கப்பலில இந்தியக் கடற்படையினரும் இருநதனர் என்பதை மாலைதீவு பாதுகாப்பு அதிகாரி ஒருவர் முதல்முறையாக ஒப்புக்கொண்டுள்ளார்.

காலியில் கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படையின் மூத்த அதிகாரியான லெப். கேணல் மொகமட் இப்ராகிம், 2007 ஆம் ஆண்டு மாலைதீவு கடறபரப்பில் கரையோரக் காவல்படையினரை எதிர்கொண்டபோது விடுதலைப் புலிகளே 'சிறிகிருஸ்ணா' என்ற இழுவைப் படகிற்குத் தீமூட்டிக் கொண்டதாகக் கூறினார்.

கப்பலின் மேல் தளத்தில் வைக்கப்பட்டிருந்த கொள்கலன்களில இருந்த டீசலை ஊற்றிய பின்னரே கப்பலுக்குத் தீ வைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மாலைதீவு கடலோரக் காவலபடையினர் எச்சரிக்கை வேட்டுகளைத் தீர்த்ததை அடுத்து, கடற்புலிகளால் கடத்தப்பட்ட அந்த இந்திய இழுவைப் படகில் இருந்த இந்தியர் ஒருவரை கடலில் குதிக்க அனுமதித்தனர். அவரை கடலோரக் காவல்படை கப்பலான 'ஹராவி' மீட்டது என்றும் லெப்.கேணல் மொகமட் இப்ராகிம் கூறினார்.

முன்னதாக 'சிறிகிருஸ்ணா' கடும்மோதல் ஒன்றையடுத்தே மூழகடிக்கபட்டதாக தகவல் வெளியானது. தற்போது மாலைதீவு பாதுகாப்பு அதிகாரி கூறியுள்ள தகவல் அதற்கு முற்றிலும் முரண்பாடானதாக உள்ளது.

இயந்திரக்கோளாறு ஏற்பட்டதால் சிறிகிருஸ்ணாவை' கடற்புலிகளால் கொண்டுசெல்லவோ கைவிடடுச் செல்லவோ முடியவில்லை.

'ஹராவி'யின் பணியாளர்கள் வேறு பணிகளில் ஈடுபட்டிருந்ததால் அந்த இடத்துக்குச் சென்றடைய ஒன்றரை மணிநேரம் வரை தாமதம் ஏற்பட்டது. அதற்குள் 'சிறிகிருஸ்ணா' தப்பிச் சென்றிருக்க முயன்றிருக்கலாம்.

அவர்களை சரணடைய வைபதற்கு பல மணிநேரம் பேச்சுக்களை நடத்தினோம். இதன்போது பல இந்திய அதிகாரிகளும் மாலுமிகளும் 'ஹராவி'யில் இருந்தனர்.

2007 மே மாதம் இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு சொற்ப காலம் முன்னதாகவே ஹராவியை இந்தியா வழங்கியிருந்தது.

எனவே மாலைதீவு கடலோரக் காவல்படையினருக்கு அதனைக் கையாளும் பயிற்சியை வழங்க இந்திய அதிகாரிகளும் மாலுமிகளும் அதில் தங்கியிருந்தனர்.

மாலைதீவு கடற்படையினரின் கைகளில் அந்த ஆயுதங்கள் விழுவதைத் தடுப்பதற்காகவே கடற்புலிகள் சிறிகிருஸ்ணாவுக்குத் தீவைத்து அழித்தனர்.

ஆனால் அதில் இருந்து தப்பியவரை விசாரிக்க இலங்கை கடற்படைக்கு மாலைதீவு அதிகாரிகள் அனுமதி அளித்தனர்.

அது ஆழ்கடலில் இயங்கிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் ஏனைய கப்பல்களை சிறிலங்கா கடற்படை குறிவைப்பதற்கு வசதியானது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பகிடிவதையில் ஈடுபட்டவேளை சிரேஷ்ட மாணவர்கள் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

புதுமுக மாணவர்களைப் பகிடிவதைக்கு உட்படுத்தியதாக யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக மூன்றாம் வருட மாணவர்கள் 10 பேர் பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரியினால் கண்டுபிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது. இச்சம்வம் தொடர்பாகத் தெரியவருவதாவது புதுமுக மாணவர்களாக இராமநாதன் நுண்கலைக்கு உள்ளீர்க்கப்பட்ட மாணவர்கள் வழமை போன்று அறிமுக விழா நிகழ்வில் கலந்துகொள்வதற்காக குறித்த வளாகத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் இருந்துள்ளனர். அவ்வேளை திடீரென மண்டபத்திற்குள் உட்புகுந்த மூன்றாம் வருட மாணவர்கள் அவர்களை பகிடிவதைக்கு உட்படுத்தியுள்ளனர். இதேவேளை அறிமுக விழாவிற்கு வளாக்ததிற்கு வருகைதந்த பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரி சிரேஷ்ட மாணவ ஆலோசகர் உள்ளிட்ட பல்கலைக்கழக உயரதிகாரிகள் குறித்த பகிடிவதையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாணவர்களை கையும் களவுமாக பிடித்ததுடன் அவர்களை எச்சரிக்கை செய்தனர்.

அத்துடன் பிடிக்கப்பட்ட மாணவர்களை இன்று விசாரணைக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. மேலும் பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்கள் அவர்களுக்கான பாடங்கள் நடந்துகொண்டிருந்த நிலையில் இச் செயலில் ஈடுபட்டதாக மற்றுமொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

# எக்னலிகொட வெளிநாட்டில் தஞ்சம் மொகான் பீரிஸ் கருத்தால் சர்ச்சை

(கொழும்பு)

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கடத்தப்பட்டு காணாமல் போன செய்தியாளரான பிரகீத் எக்னலிகொட வெளிநாட்டில் தஞ்சமடைந் துள்ளார் என்று அந்நாட்டின் முன்னாள் சட்டமா அதிபரும், அரசின் சட்ட ஆலோசகருமான மொஹான் பீரிஸ் தெரிவித்ததாக வந்த செய்தி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

லங்கா இ நியூஸ் எனும் செய்தி இணையத்தின் ஆசிரியரும், கேலிச்சித்திர படங்கள் வரைபவருமான எக்னலிகொட கடத்தி காணாமல் போனதாகக் கூறுவதும் அவரது விடுதலைக்காக நடைபெற்றுவரும் பிரச்சாரங்களும் மோசடியான ஒரு செயல்பாடு எனவும் மொஹான பீரீஸ் தெரிவித்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

இந்நிலையில், மொஹான் பீரிஸ் கூறுகின்றபடி தனது கணவர் வெளிநாடு ஒன்றில் ஒளிந்து கொண்டிருப்பாரேயானால், தங்களுடன் தொடர்பு கொள்ளாமல் இருக்க மாட்டார் என்று அவரது மனைவி சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார்.

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

துன்னாலை காசிநாதர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் போ.இரத்தினராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கரவெட்டிக் கோடடக்கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம், திருமதி மனோகரி நற்குணலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-109)

# ஆராய்ந்த பின்னரே அறிவிக்கலாம்

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகளின் தோல்வி தொடர்பில் நோர்வேயில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை ஆராய்ந்துகொண்டிருக்கின்றோம் அறிக்கையை ஆராய்ந்ததன் பின்னரே அது தொடர்பில் கருத்துவெளியிட முடியும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும் எம்பி.யுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

சமாதான பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்தமை தொடர்பில் நோர்வேயில் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் விபரிக்கையிலேயே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

# மாணவர்களுக்கு கருத்தரங்கு

இவ்வாண்டில் க.பொ.த. சாதாரதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு நாளை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இராணுவத்தினரின் அனுசரணையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கு புத்தூர் சொமாஸ்கந்தா கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கின்போது இலவசப் பரீட்சைத்தாள்கள், மதிய உணவு என்பனவும் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (135)

# எயிட்ஸ் நோய்த் தாக்கம் இலங்கையில் 1431 பேர் பாதிப்பு

இலங்கையில் எச்.ஐ.வி யினால் தாக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த வருடதற்கு இணைவாக எச்.ஐ.வி நோயாளர்களின் தொகை அதிகரித்துள்ளதாக தேசிய எயிட்ஸ் ஒழிப்பு திட்டம் தெரிவித்துள்ளது. தற்போது ஆயிரத்து 431 நோயாளிகள் இனங காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தின் முதல் காலாண்டில் மட்டும் 43 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். எச்.ஐ.வி யினால் தாக்கப்பட்ட 1431 பேரில் 844 பேர் ஆண்கள் என தேசிய எயிட்ஸ் ஒழிப்பு திட்டம் தெரிவித்துள்ளது. 587 பெண்களும் இந்நோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். பாதுகாப்பற்ற உடலுறவு காரணமாகவே நோயாளிகள் தொகை அதிகரித்துள்ளதாக தேசிய எயிட்ஸ் ஒழிப்பு திட்டம் தெரிவித்துள்ளது

# குழியில் வீழ்ந்த குடும்பஸ்தர் படுகாயம்

வீதியோரக் குழியில் விழுந்து குடிபோதையில் வந்த குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்வபம் நேற்று மாலை 7.00 மணியளவில் கோவில் வீதியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் கோவில் வீதியைச் சேர்ந்த மகேந்திரன் (வயது-77) என்பவரே படுகாயமடைந்தவராவார். மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும்போது எதிரே வந்த மற்றுமொரு வாகனத்திற்கு வழிவிடும் நோக்கில் ஓரமாக மோட்டார் சைக்கிளை நகர்த்தும்போது அருகில் வீதியோரமாக இருந்த நீர்நிறைந்த குழியில் வீழ்ந்துள்ளார்.

உடனடியாக அங்கிருந்து மக்கள் இவரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். இதேவேளை கடந்த சில தினங்களாக பருவமழை பெய்துவருவதால் பிரதான வீதிகளில் சேதமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

# நல்லொழுக்க நிறுவன கட்டடத் திறப்புவிழா

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவன கட்டடத்திறப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அல்வாய் மாலுசந்திக்கு அருகாமையில் நிறுவனத் தலைவர் பா. இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகவும், நோர்வே போரூட் நிறுவன பொதுச் செயலாளர் மோட்டின் லொன்ஸ்றற் கௌரவ விருந்தினராகவும், இலங்கை போரூட் நிறுவனப் பணிப்பாளர் எம்.எவ். மரிக்கார், பருத்தித்துறை பிரதேச செயலர் வரதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-18,109)

# பாலத்தை உடைத்த லொறி பள்ளத்தில் வீழ்ந்து விபத்து

வவுனியா - செட்டிக்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மதவாச்சி - மன்னார் ஏ - 14 வீதியின் 39 கிலோ மீற்றர் பெரியகட்டு பகுதியில லொறியொன்று வீதியை விட்டுவில்கி பாலத்தை உடைத்துக் கொண்டு பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை 05.50 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் படுகாயமடைந்த லொறியின் நடத்துனரும் சாரதியும் செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நடத்துனர் உயிரிழந்துள்ளார்.

சாரதி தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகிறார். மட்டக்களப்பு காத்தான்குடி ஹரீப் நகர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய மொஹமட பர்சாய் என்பரே உயிரிழந்துள்ளார். செட்டிக்குளம் பொலிஸார் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதனா வைத்தியசாலையின் தேவைகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டுத் தூதுக்குழு யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு வைத்தியசாலையின் தற்போதைய நிலமை குறித்து ஆராய்ந்து சென்றுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் ஸ்கானர் பிரிவு, கதிர்வீச்சு பிரிவு மற்றும் வைத்தியசாலையின் முக்கிய இடங்களைப் பார்வையிட்ட இக்குழுவினருக்கு வைத்தியசாலையின் அபிவிருத்தி மற்றும் வைத்தியசாலையின் அவசர தேவைகள் குறித்து வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா விளக்கமளித்தார்.

இந்தோனேசியக் குடியரசுத் தூதுவர் ஜபர் ஹிசைன், மலேசிய உயர்ஸ்தானிக அதிகாரி தான்லெட் லங், வியட்நாம் குடியரசுத் தூதுவர் டொன் சின் தன், மலேசிய உயர்ஸ்தானிக அதிகாரி அஸ்மி சைனுடின் இந்தோனேசியத் தூதுவராக முதலாவது செயலாளர் அல்பேர்ட் அப்டி உட்பட தய்லாந்து தூதர அதிகாரிகளும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். (எஸ்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.